www.Padasalai.Net www.CBSEtips.in

இப்பொழுது விற்பனையில்

மெர்சி

# சமூக அறிவியல்

புதிய பாடநூலின் அடிப்படையில் அமைக்கப்பெற்ற பதிப்பு








www.Padasalai.Net

**இந்நூலில்**

- சரியான விடையைத் தேர்வு செய்தல்
- கோடிட்ட இடங்களை நிரப்புதல்.
- சரியான கூற்றைத் தேர்வு செய்தல், பொருத்துக
- சுருக்கமாக விடையளித்தல், விரிவான விடையளித்தல்
- காரணம் கூறுதல், வேறுபடுத்துதல்
- காலக்கோடு, வரைபடங்கள் (வரலாறு, புவியியல்)
- முதல் இடைப்பருவம், காலாண்டுத்தேர்வு வினாத்தாள்கள்
- இரண்டாம் இடைப்பருவம், அரையாண்டுத்தேர்வு வினாத்தாள்கள்
- மாதிரி வினாத்தாள்கள்

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

**2023 - 24**

கல்வி ஆண்டிற்கான புதிய பதிப்பு

# 10

**Bookback Questions & Answers**
**PTA & Exam Questions (Interior)**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# மெர்சி சமூக அறிவியல்

## பத்தாம் வகுப்பு

## Bookback Questions & Answers
## PTA & Exam Questions (Interior)

பேரன்புடையீர் வணக்கம்,

கடந்த 29 ஆண்டுகளாகப் பள்ளி மாணவர்களுக்குரிய துணைநூல்களையும் மாதிரி வினா – விடை நூல்களையும் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகிறோம். இந்நூல்கள் அனைத்தும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தி, பள்ளித்தேர்விலும் அரசு பொதுத்தேர்விலும் உயர் மதிப்பெண்கள் பெற உற்ற துணையாக அமையும்.

பாடநூலில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் எளியநடையில், சுருக்கமாக விடையளிக்கப்பட்டுள்ளன. கற்பித்தலில் நீண்ட நெடிய அனுபவம்மிக்க ஆசிரியர்களைக் குழுக்களாகக் கொண்டு, நூல்கள் அனைத்தும் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்கள் சிலவற்றை, தங்களின் மேலான பார்வைக்கு இங்கே வழங்கியுள்ளோம். நூலைப் பார்வையிட்டு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி ஆசிரியர்களை அன்புடன் வேண்டுகிறோம். நன்றி! வணக்கம்!

**இந்நூலில்**

- சரியான விடையைத் தேர்வு செய்தல்
- கோடிட்ட இடங்களை நிரப்புதல்.
- சரியான கூற்றைத் தேர்வு செய்தல், பொருத்துக
- சுருக்கமாக விடையளித்தல், விரிவான விடையளித்தல்
- காரணம் கூறுதல், வேறுபடுத்துதல்
- காலக்கோடு, வரைபடங்கள் (வரலாறு, புவியியல்)
- முதல் இடைப்பருவம், காலாண்டுத்தேர்வு வினாத்தாள்கள்
- இரண்டாம் இடைப்பருவம், அரையாண்டுத்தேர்வு வினாத்தாள்கள்
- ஐந்து மாதிரி வினாத்தாள்கள்

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.


# MERCY Publications

43, Bunder Street, Chennai - 600 001



நூல்களைச் சலுகை விலையில் மொத்தமாக வாங்க,
கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்
99415 16187 / 74492 00092 / 70102 31425

விலை : ரூ.180.00

| அலகு | பொருளடக்கம் |
|---|---|
| | **வரலாறு** |
| 1. | முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் |
| 2. | இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் |
| 3. | இரண்டாம் உலகப்போர் |
| 4. | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் |
| 5. | 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் |
| 6. | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் |
| 7. | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் |
| 8. | தேசியம்: காந்திய காலகட்டம் |
| 9. | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் |
| 10. | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் |
| | **புவியியல்** |
| 1. | இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு |
| 2. | இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் |
| 3. | இந்தியா – வேளாண்மை |
| 4. | இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள் |
| 5. | இந்தியா – மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் |
| 6. | தமிழ்நாடு – இயற்கைப் பிரிவுகள் |
| 7. | தமிழ்நாடு – மானுடப் புவியியல் |
| | **குடிமையியல்** |
| 1. | இந்திய அரசியலமைப்பு |
| 2. | நடுவண் அரசு |
| 3. | மாநில அரசு |
| 4. | இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை |
| 5. | இந்தியாவின் சர்வதேச உறவுகள் |
| | **பொருளாதாரம்** |
| 1. | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம் |
| 2. | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் |
| 3. | உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து |
| 4. | அரசாங்கமும் வரிகளும் |
| 5. | தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் |
| | காலக்கோடுகள் |
| | மாதிரி வினாத்தாள்கள் |


www.Padasalai.Net

# பொதுத்தேர்வு வினாத்தாள்
# ஏப்ரல் - 2023
## சமூக அறிவியல்

காலஅளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரி பார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின், அறைக் கண்காணிப் பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கறுப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சிலை பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : இவ்வினாத்தாள், நான்கு பகுதிகளைக் கொண்டது

### பகுதி – I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 14 x 1 = 14

(ii) கொடுக்கப்பட்ட **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**I. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் பொருத்தமான விடையை எழுதவும்:**

1. உலகத்தின் எந்தப் பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை ?
அ) ஐரோப்பா ஆ) இலத்தீன் அமெரிக்கா
இ) இந்தியா ஈ) சீனா

2. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது ?
அ) செப்டம்பர் 1959 ஆ) செப்டம்பர் 1949 இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944

3. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வேலுநாச்சியார் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

4. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) கல்கத்தா ஈ) நாக்பூர்

5. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார் ?
அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பர்லின் இ) உட்ரோ வில்சன் ஈ) பால்டுவின்

6. ஆந்த்ரசைட் நிலக்கரி ______ கார்பன் அளவை கொண்டுள்ளது.
அ) 80% – 95% ஆ) 70% –க்கு மேல்
இ) 60% – 70% ஈ) 50% –க்கும் குறைவு

7. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் ______.
அ) ஆனைமுடி ஆ) தொட்டபெட்டா இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்

8. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை :
அ) 3 மற்றும் 15 ஆ) 4 மற்றும் 16 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

9. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ______.
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

10. கம்பு ______ –ஐ பூர்விகமாகக் கொண்ட பயிராகும்.
அ) ஆசியா ஆ) இந்தியா இ) ஆப்பிரிக்கா ஈ) ரஷ்யா

www.Padasalai.Net

11. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசு தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார் ?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360
இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

12. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
i) பஞ்சசீலம் ii) சீனாவின் அணு வெடிப்புச் சோதனை
iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்
iv) இந்தியாவின் முதல் அணு வெடிப்புச் சோதனை
அ) i, iii, iv, ii ஆ) i, ii, iii, iv இ) i, ii, iv, iii ஈ) i, iii, ii, iv

13. ______ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
அ) நீலப் புரட்சி ஆ) வெள்ளைப் புரட்சி
இ) பசுமைப் புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

14. பின்வருவனவற்றுள் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?
அ) ராணிப்பேட்டை ஆ) தர்மபுரி
இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி

## பகுதி – II

**குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **10 x 2 = 20**

15. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார் ?
16. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணி வகுப்பின் விளைவுகள் யாவை ?
17. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து குறிப்பு வரைக.
18. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை தொகுத்து வழங்கவும்.
19. பதுங்கு குழி போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?
20. பேரிடர் அபாய நேர்வு – வரையறுக்கவும்.
21. பன்னாட்டு வணிகம் – வரையறுக்கவும்.
22. கோயம்புத்தூர் ஏன் தமிழ்நாட்டின் 'மான்செஸ்டர்' என அழைக்கப்படுகிறது ?
23. இயற்கை எரிவாயு என்றால் என்ன ?
24. வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன ?
25. இந்தியாவின் செம்மொழிகள் யாவை ?
26. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
27. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன ?
28. விகித வரி விதிப்பு முறை என்றால் என்ன ?

## பகுதி – III

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** **10 x 5 = 50**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
i) டானென்பர்க் போரில் ______ பேரிழப்புகளுக்கு உள்ளானது.
ii) சாத்தனூர் அணை ______ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
iii) ______ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
iv) இந்திய அரசியலமைப்பு ______ அரசாங்கத்தை வழங்குகிறது.
v) ______ ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

www.Padasalai.Net

30. இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31. வேலூரில் 1806–ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
32. அ) வேறுபடுத்துக.
 i) மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்.
 ii) உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்.
 ஆ) காரணம் கூறுக.
 கிழக்கு தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.
33. சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரிக்கவும்.
34. தென்மேற்கு பருவக் காற்று குறித்து எழுதுக.
35. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரிக்கவும்.
36. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.
37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை ?
39. பொது விநியோக முறையை விவரிக்கவும்.
40. MNC வளர்ச்சிக்கான காரணங்களை விவரிக்கவும்

**குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டு காட்டுவதற்கு பதிலாக, அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.**

41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக :
 1910 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.
 i) கிரேட் பிரிட்டன் ii) பிரான்ஸ் iii) இத்தாலி
 iv) ஜெர்மனி v) மொராக்கோ

## பகுதி – IV

**குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **2 x 8 = 16**

43. அ) தீபகற்ப பீடபூமிகள் பற்றி விவரிக்கவும்.

**(அல்லது)**

 ஆ) 1857 பெருங்கலகம் தோல்வியடைய காரணங்களை ஆராய்க.

**குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.**

**44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
 i) ஆரவல்லி ii) நர்மதை
 iii) தக்காண பீடபூமி iv) பன்னா உயிர்கோள பெட்டகம்
 v) தார் பாலைவனம் vi) மேற்கு தொடர்ச்சி மலைகள்
 vii) பாரதீப் viii) கரிசல்மண் பகுதி ஒன்று

**(அல்லது)**

**ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில், கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
 i) பாலாறு ii) வேடந்தாங்கல்
 iii) காபி விளையும் பகுதி iv) முல்லை பெரியார் அணை
 v) பட்டு தொழில் நடைபெறும் இடம் vi) எண்ணூர்
 vii) விமான நிலையம் (ஏதேனும் ஒன்று) viii) இந்தியப் பெருங்கடல்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# வரலாறு

## அலகு - 1

# முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

### பாடச்சுருக்கம்

மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள், பல நுகர் பொருட்களை மிகுந்த எண்ணிக்கையில் விரைவாகவும் குறுகிய காலத்திலும் தயாரிக்கத் தொழில்புரட்சி உதவியது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்க, அந்த நாட்டவர்களுக்குச் சந்தைகள் தேவைப்பட்டன. அதனால் உருவான காலனி ஆதிக்கப் போட்டியின் விளைவாக, ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டன.

ஜப்பான், ஓர் ஏகாதிபத்திய நாடாகத் தனது எல்லைகளை விரிவுபடுத்தியது. இச்செயல் சீனாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் எரிச்சலூட்டியது. அதனால் உருவான போர் காரணமாக ஐரோப்பிய நாடுகள் இரு முகாம்களாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவும் தத்தமக்கு ஆதரவான நாடுகளை, அணிகளாகச் சேர்த்துக்கொண்டன. முதலாளித்துவ நாடுகளில் தேசியம் மிகப் பெரிய ஆற்றல் படைத்த வடிவமாக உருவெடுத்தது. 1871இல் பிரான்சும் ஜெர்மனியும் போரிட்டன. அப்போரின் இறுதியில் அல்சேஸ் லொரைன் பகுதிகளைப் பிரான்சு ஜெர்மனியிடம் இழந்ததால் ஜெர்மனியை வெறுத்தது.

பால்கன் பகுதியில் உருவான அதிகார அரசியல், முதலாளித்துவ நாடுகள்மீது வெறுப்பை ஏற்படுத்தியது. அமெரிக்கக் கப்பலான லூசிதானியா மீது ஜெர்மனி தொடுத்த தாக்குதல், அமெரிக்காவை வெகுண்டெழுந்து முதல் உலகப்போரில் நுழையச் செய்தது. உலகில் போர் நடப்பதைத் தடுக்கப் பன்னாட்டுச் சங்கம் உருவாவதற்கான சூழல் ஏற்பட்டது. உலக அமைதியை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுச் சங்கத்தால், அடுத்த உலகப்போர் உருவாவதைத் தடுக்க இயலவில்லை.

### கற்றலின் நோக்கங்கள்

- ஐரோப்பிய வல்லரசுகளிடையே பகைமையும் மோதல்களும் ஏற்படுவதற்கு இட்டுச் சென்ற காலனியாதிக்கப் போட்டி
- கிழக்கு ஆசியாவில் ஜப்பான் அதிக வலிமை மிகுந்த நாடாகவும் ஆக்கிரமிப்பு செய்யும் தன்மை கொண்ட நாடாகவும் மேலெழுதல்
- காலனியாதிக்கம் ஆப்பிரிக்காவின் மீது தாக்கத்தை ஏற்படுத்துதல்
- முதல் உலகப்போருக்கான காரணங்கள், போரின் போக்கு, விளைவுகள்
- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் அதன் சரத்துக்களும்
- ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களும் அதன் போக்கும் விளைவுகளும்
- பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுதலும் அதன் செயல்பாடுகளும் தோல்வியும்

### பாடநூல் பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?

   அ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, உதுமானியர்.

   ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, ரஷ்யா.

   இ) ஸ்பெயின், போர்ச்சுக்கல், இத்தாலி.

   ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, இத்தாலி.

   **விடை : அ) ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, உதுமானியர்.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?

அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா

**விடை : ஆ) ஜப்பான்**

3. “ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்” எனக் கூறியவர் யார்? **(PTA-6, May-22)**

அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே தூங்

**விடை : அ) லெனின்**

4. மார்ன் போர், எதற்காக நினைவு கூறப்படுகிறது?

அ) ஆகாயப் போர்முறை ஆ) பதுங்குகுழிப் போர்முறை
இ) நீர்மூழ்கிக்கப்பல் போர்முறை ஈ) கடற்படைப் போர்முறை

**விடை : ஆ) பதுங்குகுழிப் போர்முறை**

5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ்
இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**விடை : அ) பிரிட்டன்**

6. பின்லாந்தைத் தாக்கியதற்காகப் பன்னாட்டுச் சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது? **(Sep.-21)**

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

**விடை : ஆ) ரஷ்யா**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ______ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.

**விடை : 1894**

2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ______ உடன்படிக்கையின்படி, அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. **(May-22)**

**விடை : லண்டன்**

3. ______ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்புறவு ஒப்பந்தம் செய்து கொண்டது.

**விடை : 1902**

4. பால்கனில் ______ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.

**விடை : மாசிடோனியா**

5. டானென்பர்க் போரில் ______ பேரிழப்புகளுக்கு உள்ளானது. **(April-23)**

**விடை : ரஷ்யா**

6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ______ ஆவார்.

**விடை : கிளமென்சோ**

7. ______ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. **(PTA-1)**

**விடை : 1925 ஆம்**

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
ii) துருக்கி, மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
iii) சூயஸ் கால்வாயைத் தாக்கத் துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

அ) i, ii ஆகியன சரி ஆ) i, iii ஆகியன சரி
இ) ii, iii ஆகியன சரி ஈ) i, ii, iii ஆகியன சரி

**விடை : ஈ) i, ii, iii ஆகியன சரி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. **கூற்று** : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக, ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.

**காரணம்** : சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.

அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.

ஆ) கூற்றுச் சரி. ஆனால், காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.

ஈ) காரணம் சரி, ஆனால், கூற்றுத் தவறு.

**விடை : ஆ) கூற்றுச் சரி. ஆனால், காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.**

## IV. பொருத்துக. விடை :

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கை | வெர்செய்ல்ஸ் | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 2. | ஜிங்கோயிசம் | துருக்கி | இங்கிலாந்து |
| 3. | கமால் பாட்சா | ரஷ்யாவும் ஜெர்மனியும் | துருக்கி |
| 4. | எம்டன் | இங்கிலாந்து | சென்னை |
| 5. | கண்ணாடி மாளிகை | சென்னை | வெர்செய்ல்ஸ் |

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. சீன – ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?**

★ 1894இல் ஜப்பான், சீனாவின்மீது வலுக்கட்டாயமாக ஒரு போரை மேற்கொண்டது.

★ இப் போரில் **சீனாவைச்** சிறிய நாடான **ஜப்பான்** தோற்கடித்தது உலகை **வியக்கவைத்தது.**

★ ஜப்பான், லியோடங் தீபகற்பத்தை **ஆர்தர் துறைமுகத்துடன்** இணைத்துக்கொண்டது.

★ கிழக்கு ஆசியாவில் **வலிமை மிகுந்த** நாடு தானே என்பதை **ஜப்பான் மெய்ப்பித்தது.**

**2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.** (Sep.-22)

★ இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகியவை மூவர் கூட்டு நாடுகளாகும்.

**3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?** (PTA-1)

★ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று (Jingoism),

★ பிரான்சின் அதி தீவிரப்பற்று (Chauvinism),

★ ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று (Kultur).

**4. பதுங்கு குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** (PTA-3, Sep.-21, April-23)

★ போர் வீரர்களால் தோண்டப்படும் பதுங்கு குழிகள், **எதிரிகளின் சுடுதலில்** இருந்து தங்களைக் காத்துக்கொண்டு, **பாதுகாப்பாக நிற்க** உதவின.

★ பிரதான பதுங்கு குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும்.

★ அவற்றின் வழியாக **உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள்** ஆகியவை வந்துசேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

எ – கா : மார்ன் போர் (1914)

**5. முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?**

★ துருக்கி ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா, முக்கியப் பங்கு வகித்தார்.

★ கமால் பாட்சா அந்நாட்டிற்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை. அவர், **துருக்கியை நவீனமயமாக்கி**, அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்து மாற்றியமைத்தார்.

**6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான எவையேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.** (PTA-5)

★ பன்னாட்டுச் சங்கத்திற்கென்று **இராணுவம் இல்லை** என்பதால், தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.

★ அமைதிக்கான **'கூட்டுப்பாதுகாப்பு'** எனும் கோட்பாட்டை, இவ்வமைப்பை உருவாக்கியவர்களால் நடைமுறையில் **செயல்படுத்தவே** முடியவில்லை.

www.Padasalai.Net

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** (PTA-1, Sep.-20,21, May-22)

**ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும் :**

★ 1900இல் **ஐரோப்பிய வல்லரசுகளில்** ஐந்து அரசுகள், **இரண்டு ஆயுதமேந்திய** முகாம்களாகப் பிரிந்தன. ஒரு முகாம், மைய நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. **பிஸ்மார்க்கின்** வழிகாட்டுதலில் அவை 1882இல் "**மூவர் உடன்படிக்கையை**" மேற்கொண்டன.

★ மற்றொரு முகாமில் **பிரான்சு, ரஷ்யா** மற்றும் **பிரிட்டன்** ஆகிய நாடுகள் இணைந்தன. இந்த நாடுகளுக்கு இடையே 1904இல் இணைப்பு உருவாக்கப்பட்டது. இந்த இணைப்பு, "**மூவர் கூட்டு**" எனப்பட்டது.

**வன்முறை சார்ந்த தேசியம்:**

★ இங்கிலாந்தின் **ஆரவாரமான** நாட்டுப்பற்று, பிரான்சின் **அதி தீவிரப்பற்று,** ஜெர்மனியின் **வெறிகொண்ட** நாட்டுப்பற்று, ஆகிய அனைத்தும் தீவிரத் தேசியமாகப் போர் வெடிப்பதற்குத் தீர்மானமாகப் பங்காற்றியது.

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

★ ஜெர்மன் பேரரசரான **இரண்டாம் கெய்சர் வில்லியம்**, ஜெர்மனியே '**உலகத்தின் தலைவன்**' எனப் பிரகடனம் செய்தார்.

**பிரான்ஸ், ஜெர்மனியோடு கொண்ட பகை:**

★ பிரான்சும், ஜெர்மனியும் **பழைய** பகைவர்களாவர். ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டு **அல்சேஸ், லொரைன்** பகுதிகளைப் பிரான்ஸ் ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது குறித்த **கசப்பான** நினைவுகளைப் **பிரெஞ்சு மக்கள்** ஜெர்மனியின்மீது கொண்டிருந்தனர்.

**பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு:**

★ 1908ஆம் ஆண்டில் துருக்கியில் ஒரு **வலுவான, நவீன அரசை** உருவாக்கும் முயற்சியாக '**இளம் துருக்கியர் புரட்சி**' நடைபெற்றது.

★ அதன்பின் ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் சந்தித்துப் பேசி **பாஸ்னியா, ஹெர்சகோவினா** ஆகிய இரண்டையும் ஆஸ்திரியா இணைத்துக்கொண்டது.

★ இதன் தொடர்பில் ஜெர்மனி ஆஸ்திரியாவிற்கு **உறுதியான** ஆதரவை நல்கியது.

★ ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை, **1914–இல் போர் வெடிக்கக்** காரணமாயிற்று.

**பால்கன் போர்கள்:**

★ பதினெட்டாம் நூற்றாண்டின் முதல்பாதியில் தென்மேற்கு ஐரோப்பாவில் **துருக்கி,** வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது. **ஆர்மீனிய இனப்படுகொலைகள்,** இதற்கு ஒரு பயங்கரமான எடுத்துக்காட்டு ஆகும்.

★ 1912ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவை பால்கன் கழகம் எனும் அமைப்பை உருவாக்கின. இக்கழகம், முதல் பால்கன் போரில் (1912–1913) துருக்கியப் படைகளைத் தாக்கித் தோற்கடித்தது.

★ 1913 மே திங்களில் கையெழுத்தான இலண்டன் உடன்படிக்கையின்படி **அல்பேனியா** எனும் **புதிய நாடு** உருவாக்கப்பட்டது. 1913 ஆகஸ்டுத் திங்களில் கையெழுத்திடப்பட்ட **புகாரெஸ்ட்** உடன்படிக்கையோடு, இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.

**உடனடிக் காரணம்:**

★ 1914 ஜூன் 28ஆம் நாள் ஆஸ்திரியப் பேரரசரின் மகனும் வாரிசுமான பிரான்ஸ் பெர்டினாண்டு, **பிரின்ஸப்** என்ற **பாஸ்னிய செர்பியனால்** கொலை செய்யப்பட்டார்.

★ ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது. செர்பியாவுக்கு ஆதரவாகத் தலையிட ரஷ்யா படைகளைத் திரட்டுகிறது என்னும் **வதந்தியால்,** ஜெர்மனி ரஷ்யாவுக்கு எதிராகப் போர் அறிவிப்பு செய்தது.

★ பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கவே, இப்போரில் **இங்கிலாந்து பங்கேற்பது** கட்டாயமாயிற்று.

**2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளைக் கோடிட்டுக் காட்டுக.**

**ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகள் :** (PTA-2,6)

★ போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்கவேண்டும். ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. **சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே** வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

★ **ஆஸ்திரியா, ஜெர்மனி** ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது. ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் **பன்னாட்டுச் சங்கத்தின்** பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

★ ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட பிரெஸ்ட்–லிடோவஸ்க் உடன்படிக்கையையும், பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட **புகாரெஸ்ட் உடன்படிக்கை**யையும் திரும்பப் பெற்றுக்கொள்ள ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது. **அல்சேஸ் – லொரைன்** பகுதிகள், **பிரான்சுக்குத்** திருப்பித் தரப்பட்டன.

★ முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன, **சுதந்திரநாடுகளாகச்** செயல்பட அனுமதிக்கப்பட்டன.

★ வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும், சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன. நேசநாடுகளின் ஆக்கிரமிப்பின்கீழ் ரைன்லாந்து இருக்கும் என்றும், **ரைன்நதியின்** கிழக்குக்கரைப் பகுதி, **படைநீக்கம்** செய்யப்பட்ட பகுதியாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

**3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின்போக்கினை விளக்குக.**

**தற்காலிக அரசின் தோல்வியும் லெனினின் தாக்கமும் :**

★ ரஷ்யப் புரட்சி வெடித்தபோது **லெனின், சுவிட்சர்லாந்தில்** இருந்தார். புரட்சி தொடர்ந்து நடைபெற வேண்டுமென அவர் விரும்பினார். "**அனைத்து அதிகாரங்களும் சோவியத்திற்கே**" என்ற அவரது முழக்கம், தொழிலாளர்களையும் தலைவர்களையும் கவர்ந்தது.

★ போர்க்காலத்தில் ஏற்பட்டிருந்த பற்றாக்குறைகளால் பெருந்துயரங்களுக்கு உள்ளாகியிருந்த மக்கள், **ரொட்டி, அமைதி, நிலம்** எனும் முழக்கத்தால் கவரப்பட்டனர். ஆனால் தற்காலிக அரசு, இரண்டு முக்கியத் தவறுகளைச் செய்தது. ஒன்று, **நிலங்களின் விநியோகம்** குறித்த கோரிக்கையின்மீது எடுக்கப்பட வேண்டிய முடிவைத் தள்ளிவைத்தது. மற்றொன்று, **போரைத் தொடர்வதென** முடிவு எடுத்தது.

**லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுதல் :**

★ அக்டோபர்த் திங்களில், லெனின், **போல்ஷ்விக் கட்சி**யின் மத்தியக்குழுவை உடனடிப் புரட்சி குறித்து முடிவுசெய்யக் கேட்டுக்கொண்டார். **டிராட்ஸ்கி**, ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார்.

★ நவம்பர் 7இல் முக்கியமான அரசுக் கட்டடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதமமந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை அனைத்தும் **ஆயுதமேந்திய ஆலைத்** தொழிலாளர்களாலும், புரட்சிப்படையினராலும் கைப்பற்றப்பட்டன.

★ **1917 நவம்பர் 8இல்** ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. போல்ஷ்விக் கட்சிக்கு **ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி** எனப் புதுப்பெயரிடப்பட்டது.

**4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.** (PTA-4)

★ உலக அமைதிக்காக உருவாக்கப்பட்ட முதல் அமைப்பு "பன்னாட்டுச் சங்கம்" ஆகும். இது 1920ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1939ஆம் ஆண்டுவரை பணியாற்றியது. அதன் பணிகள் :

★ **1920–25** ஆகிய ஆண்டுகளுக்கிடையே பன்னாட்டுச் சங்கம், சிக்கல்களைத் தீர்த்துவைக்க அழைக்கப்பட்டது. மூன்று பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது.

★ 1920இல் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த **ஆலேண்டு தீவுகள்** யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டது. **பன்னாட்டுச் சங்கம்**, அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது எனத் தீர்ப்பளித்தது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- ★ அடுத்த ஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே **மேலை சைலேஷியா** பகுதியில் எல்லைப் பிரச்சினை ஏற்பட்டு, பிரச்சினையைத் தீர்த்துவைக்கச் சங்கம் அழைக்கப்பட்டபோது, அப்பிரச்சினையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.
- ★ 1925இல் மூன்றவாது பிரச்சினை **கிரீஸ், பல்கேரியா** நாடுகளுக்கிடையே ஏற்பட்டதாகும். ஆகவே 1925இல் **லொக்கர்னோ** உடன்படிக்கை கையெழுத்தாகின்றவரை சர்வதேசச் சங்கம் வெற்றி கரமாகவே செயலாற்றியது.
- ★ மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதம் அளித்த பின்னர் ஜெர்மனி, பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக்குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது.

## PTA & Exam Questions (Interior)

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும். (PTA-4)

   i) முதல் உலகப்போர் வெடித்தபோது, இத்தாலி நடுநிலைமை வகிக்கும் நாடாக இருந்தது.
   ii) வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையில், இத்தாலி பெரும் ஏமாற்றமடைந்தது.
   iii) செவ்ரஸ் உடன்படிக்கை இத்தாலியுடன் கையெழுத்திடப்பட்டது.
   iv) சிறிய இடங்களான ட்ரைஸ்டி, ஆஸ்திரியா, தெற்கு டைரோல் போன்றவை இத்தாலிக்கு மறுக்கப்பட்டது

   அ) i மற்றும் ii ஆகியன சரி ஆ) ii சரி
   இ) iv சரி ஈ) i, iii மற்றும் iv ஆகியன சரி

   **விடை : அ) i மற்றும் ii ஆகியன சரி**

### V. சுருக்கமாக விடையளி.

**1. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் எவையேனும் இரண்டு சரத்துகளை எழுதுக.** (PTA-6)

- ➤ போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டும்.
- ➤ ஆஸ்திரியா – ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடை செய்யப்பட்டது.

**2. ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.** (Sep.-20)

- ➤ 1917ஆம் ஆண்டு நடந்த ரஷ்யப் புரட்சி உலக மக்களின் கற்பனையைத் தூண்டியது.
- ➤ பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்கம் தந்து முழுமையான ஆதரவையும் அளித்தது.
- ➤ நிலச் சீர்த்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்றவை குறித்த விவாதங்கள் உலக அளவில் நடைபெறத் தொடங்கின.

### VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.** (PTA - 4)

- ➤ 1920ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் அமைப்பாகவே இருந்தது. **சங்கத்திற்கென்று இராணுவம் இல்லாததால்,** தான் எடுத்த முடிவுகளை அதனால் செயல்படுத்த முடியவில்லை. அமைதிக்கான இந்த அமைப்பை உருவாக்கியவர்கள் **தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை** உணர்ந்திருக்கவில்லை.
- ➤ **"கூட்டுப்பாதுகாப்பு"** என்ற கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை. **இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி** ஆகிய சர்வாதிகார நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தபோது **இங்கிலாந்து, பிரான்ஸ்** ஆகிய நாடுகள் மட்டுமே உறுதியாகச் செயல்படும் நிலையில் இருந்தன.
- ➤ முதல் உலகப்போருக்குப்பின் அமெரிக்கா **"தனித்திருக்கும் கொள்கையை"** பின்பற்றியது. மற்ற நேசநாடுகள் **"தலையிடாக் கொள்கை"**யில் உறுதியாக இருந்தன. இவ்வாறாக பன்னாட்டுச் சங்கம் ஒரு **"பயனற்ற பன்னாட்டுச் சங்கமாக"** தோல்வியை தழுவியது. இறுதியாக பன்னாட்டுச் சங்கம் 1946இல் கலைக்கப்பட்டது.

www.Padasalai.Net

# அலகு - 2
# இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்

## பாடச்சுருக்கம்

உலகளாவிய முதலாளித்துவ நாடுகளின் அமைப்பை, முதல் உலகப்போர் நொறுக்கியது. போருக்கென அதிகம் செலவு செய்துவிட்ட காரணத்தினால், ஐரோப்பிய நாடுகள் திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டன. வளர்ந்துவரும் படித்த நடுத்தர வர்க்க மக்களால் ஆட்சியாளர்கள் எதிர்க்கப்பட்டனர். காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டங்கள், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் தீவிரமடைந்தது.

முதல் தேசிய உணர்வு தலைதூக்கத் தொடங்கியது. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிச சக்திகள் எழுச்சி பெற்றன. ஆப்பிரிக்க ஆசிய நாடுகளில் சுதந்திரப் போராட்டம் வலுப்பெற்றது. உலகப்போரால் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம், அனைத்து முதலாளித்துவ நாடுகளையும் சமூகத்தையும் உலகளவில் பெருமளவு பாதித்தது.

அமெரிக்கா பின்பற்றிய ‘டாலர் ஏகாதிபத்தியக் கொள்கை’, இலத்தின் அமெரிக்க நாடுகளைப் பிற நாடுகளின் தாக்கத்திலிருந்து பாதுகாத்தபோதிலும், இலத்தின் அமெரிக்கர்களிடையே வெறுப்பையே ஏற்படுத்தியது. இலத்தின் அமெரிக்க நாட்டு மக்களின் வெறுப்பும் எதிர்ப்புக் குரலும், அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் அவர்களை, டாலர் ஏகாதிபத்தியத்தை விலக்கிக்கொண்டு, நல்ல அண்டை நாட்டுக் கொள்கையை அமல்படுத்திப் பிறநாடுகளின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிட வேண்டாம் என்ற கொள்கை முடிவை எடுக்க வைத்தன.

## கற்றலின் நோக்கங்கள்

- முதல் உலகப்போருக்குப் பிந்தைய நிகழ்வுகள் பொருளாதாரப் பெருமந்தத்திற்கு இட்டுச் சென்றது.
- தோல்வியடைந்த நாடுகளின்மீது திணிக்கப்பட்ட நீதிக்குப் புறம்பான வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள், இத்தாலியில் முசோலினியின் தலைமையிலும் ஜெர்மனியில் ஹிட்லரின் தலைமையிலும் பாசிச அரசுகள் எழுச்சி பெறுதல்
- காலனிகளாக்கப்பட்ட உலகில் காலனிய எதிர்ப்புப் போராட்டங்களும், காலனிய நீக்கச் செயல்பாடுகளும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதிகளாக தென்கிழக்காசியாவில் இந்தோ – பிரான்சும், தெற்காசியாவில் இந்தியாவும்
- ஆப்பிரிக்காவில் ஐரோப்பியக்காலனிகள் உருவாக்கப்படுதல், அவ்வகையில் தென்னாப்பிரிக்காவில் இங்கிலாந்து காலனிகளை ஏற்படுத்துதல்
- தென் அமெரிக்காவில் விடுதலைப் போராட்டங்களும் அரசியல் வளர்ச்சிகளும்

## பாடநூல் பயிற்சி வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. இத்தாலி, யாருடன் லேட்டரன் உடன்படிக்கை செய்து கொண்டது? **(Dept.)**

அ) ஜெர்மனி  ஆ) ரஷ்யா  இ) போப்  ஈ) ஸ்பெயின்

**விடை : இ) போப்**

2. யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகன் நாகரிகம் சீர்குலைந்து போயிற்று?

அ) ஹெர்மன் கோர்ட்ஸ்  ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ

இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர்  ஈ) முதலாம் பெட்ரோ

**விடை : அ) ஹெர்மன் கோர்ட்ஸ்**

3. பெருநாட்டை, யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?

அ) ஆங்கிலேயர்  ஆ) ஸ்பானியர்  இ) ரஷ்யர்  ஈ) பிரெஞ்சுக்காரர்

**விடை : ஆ) ஸ்பானியர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

4. லத்தீன் அமெரிக்காவுடன் ‘அண்டை நாட்டுடன் நட்புறவு’ எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?

அ) பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்
இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்

விடை : பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட்

5. உலகத்தின் எந்தப்பகுதி, டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை? (PTA-2, April-23)

அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா

விடை: ஆ) லத்தீன் அமெரிக்கா

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியர் ______.

விடை : பெர்டினன்ட் லாஸ்ஸல்லி

2. நாசிசக் கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் ______.

விடை : ஜோசப் கோயபெல்ஸ்

3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி, ______இல் நிறுவப்பட்டது.

விடை : 1927

4. நாசிச ஜெர்மனியின் இரகசியக் காவல்படை, ______ என அழைக்கப்பட்டது.

விடை : கெஸ்டபோ

5. தென்னாப்பிரிக்க ஒன்றியம், ______ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.

விடை : 1910

6. ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா, ______ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

விடை : 27

7. போயர்கள், ______ என்றும் அழைக்கப்பட்டனர்.

விடை : ஆப்பிரிக்கநேர்கள்

## III. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

1. i) முதல் உலகப்போரில் இத்தாலியின் முதன்மையான சவாலான பணி ஆஸ்திரியர்களை தெற்குமுனையில் நிறுத்திவைப்பதாகும். (PTA-1)

ii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாளில் ஏற்பட்டது.

iii) ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசின் மீதானத் தடை 1966இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

அ) i, ii ஆகியவை சரி ஆ) iii சரி
இ) ii, iii ஆகியவை சரி ஈ) i, ii, iii ஆகியவை சரி

விடை : அ) i, ii ஆகியவை சரி

3. கூற்று : 1884–85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு, காலனியாதிக்கச் சக்திகள், ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.

காரணம் : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர், இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.

அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி
ஆ) கூற்றுச் சரி. ஆனால், காரணம் சரியான விளக்கமல்ல.
இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.
ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

விடை : அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

www.Padasalai.Net

## IV. பொருத்துக. விடை :

| | | | |
|---|---|---|---|
| 1. | டிரான்ஸ்வால் | அ) ஜெர்மனியின் குடியரசுத் தலைவர் | ஈ) தங்கம் |
| 2. | ஹின்டன்பர்க் | ஆ) ஹிட்லர் | அ) ஜெர்மனியின் குடியரசுத் தலைவர் |
| 3. | மூன்றாம் ரெய்க் | இ) இத்தாலி | ஆ) ஹிட்லர் |
| 4. | மாட்டியோட்டி | ஈ) தங்கம் | இ) இத்தாலி |

## V. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. இந்தோ – சீனாவில் நடைபெற்ற 'வெள்ளைப் பயங்கரம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன?** (PTA - 6, Sep.-22)

★ 1929இல் வியட்நாம் வீரர்கள், **இராணுவப்புரட்சி** செய்தனர். பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலைசெய்வதற்கான முயற்சியும் தோல்வி அடைந்தது.

★ இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது. இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, **'வெள்ளைப் பயங்கரவாதம்'** என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் **ஆயிரக்கணக்கில்** கொல்லப்பட்டனர்.

**2. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?** (April-23)

★ 1922 அக்டோபரில் ஒரு நீண்ட அமைச்சரவைச் சிக்கலின்போது **பாசிஸ்டுகளின்** மாபெரும் அணிவகுப்பு ஒன்றை முசோலினி ரோமாபுரியை நோக்கி நடத்தினார்.

★ முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் **மூன்றாம் விக்டர் இம்மானுவேல்,** முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.

**3. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின்மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?** (Sep.-21, May-22)

★ இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும், பொருளாதாரப் பெருமந்தம் மரண அடியைக் கொடுத்தது. எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்திப் பொருள்களின் **விலையைப் பாதியாகக்** குறைத்தது.

★ விலைவாசியில் ஏற்பட்ட **மிகப்பெரும் வீழ்ச்சி**, இந்தியத் தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது.

**4. "டாலர் ஏகாதிபத்தியம்" – தெளிவுபட விளக்குக.** (PTA-2)

★ 'டாலர் ஏகாதிபத்தியம்' என்பது, **தொலைத்தூர நாடுகளுக்குப்** பொருளாதார உதவிசெய்வதன்மூலம் அவற்றின்மீது **ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும்,** அமெரிக்கா பின்பற்றிய கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**

★ ஜெர்மனியில் 1919லிருந்து **பாசிசத்தின் தோற்றம்** தொடங்குகிறது. 1919ஆம் ஆண்டில், ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது, **மியூனிச் நகரில்** சந்தித்து தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் **உழைப்பாளர் கட்சியை,** (நாசிக் கட்சியை) நிறுவியது.

★ அவர்களுள் ஹிட்லரும் ஒருவராக இருந்தார். முதல் உலகப்போரின்போது ஹிட்லர் **பவேரியாவின் படையில்** பணியாற்றினார். அவரின் ஆற்றல் மிக்க உரை, வீரர்களைத் தட்டி எழுப்பியது. **1923இல்** பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் முயற்சி மேற்கொண்டார்.

★ சிறையில் இருந்தபோது தனது அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கிய சுயசரிதை நூலான **"மெயின்காம்ப்"** (எனது போராட்டம்) என்னும் நூலை எழுதினார். அதன்விளைவாகத் தொழிலதிபர்களும் வங்கியாளர்களும் குடியாட்சிக் கட்சியினரும் ஹிட்லரை சான்சிலராக, **முக்கிய அமைச்சர் பதவியில்** அமர்த்தும்படி குடியரசுத் தலைவர் **வான் ஹிண்டன்பர்க்கை** வற்புறுத்தினர்.

★ மூன்றாவது **ரெய்க்** என்றழைக்கப்பட்ட ஹிட்லரின் **நாசி அரசு,** முதல் உலகப்போருக்குப் பின்னர் ஜெர்மனியில் நிறுவப்பட்டிருந்த பாராளுமன்ற ஜனநாயக அரசை முடிவுக்குக் கொண்டுவந்தது. **வெய்மர் குடியரசின்** கொடிக்குப் பதிலாக **ஸ்வஸ்திக் சின்னம்** பொறிக்கப்பட்ட தேசிய சோசலிசக் கட்சியின் கொடியை ஹிட்லர் அறிமுகம் செய்தார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- ★ ஜெர்மனி மிகவும் மையப்படுத்தப்பட்ட நாடாக மாற்றப்பட்டது. நாசிக் கட்சியைத் தவிரப் பிறகட்சிகள் அனைத்தும் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டன. பழுப்பு நிறச் சட்டை அணிந்த போர்வீரர்கள், முழங்கால்களுக்கு மேல்வரும் காலணிகள் அணிந்த **புயல்படையினர்** ஆகியோரின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது.
- ★ ஹிட்லர் இளைஞர் அணியும், தொழிலாளர் அமைப்பும் நிறுவப்பட்டன. தொழிற்சங்கங்கள் ஒழிக்கப் பட்டன. அவற்றின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். நாசிசக் கட்சியின் பரப்புரை களுக்கு **ஜோசப் கோயபெல்ஸ்** தலைமையேற்றார். இவர் திட்டமிடப்பட்ட பரப்புரைகளின் மூலம் பொதுமக்களின் கருத்துகளை நாசிகளுக்கு ஆதரவாக மாற்றினார். **கெஸ்டபோ** எனும் ரகசியக் காவல்படை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹிட்லரின் மெய்க்காப்பாளர்களை **ஹைட்ரிச் ஹிம்லர்** என்பவர் நிர்வகித்தார்.

**2. உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919–39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள், எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து, வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.**

**இந்தியாவில் காலனியாதிக்க நீக்கம்:**

- ★ இந்தியாவில் காலனிய நீக்கச்செயல்பாடானது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், **1905இல் சுதேசி இயக்கத்தோடு** தொடங்கியது. முதல் உலகப்போரானது விரைவான அரசியல் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது. **1919இல்** இந்திய அரசுச்சட்டம், **இரட்டையாட்சி** முறையை அறிமுகம் செய்தது. இந்தியத் தேசியக் காங்கிரஸ், இரட்டையாட்சி தொடர்பான ஏற்பாடுகளை மறுத்ததோடு, சட்டசபைகளைப் **புறக்கணிக்கவும்** முடிவு செய்தது.

**இந்தியாவைத் தொழில்மயமாக்குவதில் நடவடிக்கைக் குறைபாடுகள்:**

- ★ சர்க்கரை, சிமெண்ட், சில வேதியியல் பொருள்களுக்கு எதிர்மறையான பாகுபாட்டு மனப்பான்மை யோடு வழங்கப்பட்ட **பாதுகாப்பைத்** தவிரக் காலனியப் பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் ஏதுமில்லை.
- ★ உள்நாட்டுத் தொழில்களைப் பொறுத்தமட்டில் **தொழில்நுட்பம் சார்ந்த** அறிவுரைகளும், கல்வியும் வழங்குதல் புதிய துறைகள் தொடர்பாக முன்னோடித் தொழில்கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் அரசு உதவிகள் செய்தது. ஆனால், ஆங்கிலேய நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால், வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

**பொருளாதாரப் பெருமந்தத்தின் போது இந்தியா:**

- ★ **1929**ஆம் ஆண்டுப் **பொருளாதாரப் பெருமந்தம்**, ஆங்கிலேய வணிக வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பெருஞ்சேதத்தை உண்டாக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்திய காகித பணத்தின் மதிப்பைக் கூட்டியதன் மூலம் ஆங்கிலேயர்கள் இறக்குமதியை மலிவாக்கினர். இத்தகைய அந்நியச் செலாவணி மாற்றுக்கொள்கை ஆங்கில அரசுக்கு எதிரான போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது.

**இந்திய வேளாண்மையின் மீது, பெருமந்தம் ஏற்படுத்தியத் தாக்கம்:**

- ★ பொருளாதாரப் பெருமந்தம், **இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும்** மரணஅடியைக் கொடுத்தது. ஆனால் விவசாயி, நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை.
- ★ விவசாய விளைபொருள்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் **இரண்டு** மடங்காயிற்று. விலைவாசியில் ஏற்பட்ட **மிகப்பெரும் வீழ்ச்சி**, இந்தியத் தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது.

**1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்:**

- ★ ஆங்கிலேயர்களுக்கு இந்தியத் தேசியவாதிகளைச் சமாதானம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் வெளிப்பாடான 1935 இந்திய அரசுச் சட்டம் என்பது, உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு, நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது.
- ★ இச்சட்டத்தின் அடிப்படையில் 1937ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில **இந்தியத் தேசியக் காங்கிரஸ்** அதிர்வை ஏற்படுத்தும் **வெற்றி**யைப் பெற்றது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**3. தென் ஆப்பிரிக்க தேசிய அரசியலின் எழுச்சி, வளர்ச்சி குறித்து விவரிக்கவும். (PTA-1)**

★ தென்னாப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக் குடியேறிகளின் வம்சாவழியினரே **ஆப்பிரிக்கநேர்கள்** என்றும் அழைக்கப்பட்ட **போயர்கள்** ஆவர். இவர்களது மொழி **ஆப்பிரிக்கான்ஸ்.**

**தென்னாப்பிரிக்காவில் தேசிய அரசியல்**

★ தென்னாப்பிரிக்காவில் இரு முக்கிய அரசியல் கட்சிகள் செயல்பட்டன.
(i) யூனியனிஸ்ட் கட்சி
(ii) தென் ஆப்பிரிக்கக் கட்சி,

★ முதல் பிரதமமந்திரியான **போதா**, தென்னாப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்தவர், ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து ஆட்சியை நடத்தினார். ஆனால், தென்னாப்பிரிக்கக் கட்சியைச் சேர்ந்த போராடும் குணமிக்க ஒரு பிரிவினர், ஹெர்சாக் என்பவரின் தலைமையின் கீழ் **தேசியக் கட்சி** எனும் கட்சியைத் தொடங்கினர். 1920ஆம் ஆண்டுத் தேர்தலில் **தேசியக் கட்சி, நாற்பத்து நான்கு** இடங்களைக் கைப்பற்றியது.

★ தென்னாப்பிரிக்கக் கட்சி **ஸ்மட்ஸ்** என்பாரின் தலைமையில் நாற்பத்தொன்று இடங்களில் வெற்றி பெற்றது. ஆங்கிலேயர் அதிகமிருந்த கம்யூனிஸ்ட் கட்சி தென்னாப்பிரிக்கக் கட்சியுடன் இணைந்ததனால் போர்க்குணம் கொண்ட ஆப்பிரிக்கநேர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தேசியக் கட்சியைக் காட்டிலும் **ஸ்மட்ஸ் பெரும்பான்மை** பெற்றார்.

## PTA & Exam Questions (Interior)

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரிதப்படுத்தியது எது ? (PTA-3)
அ) அமெரிக்கா அளித்த உதவி ஆ) நெப்போலியனின் படையெடுப்புகள்
இ) சைமன் பொலிவரின் பங்கேற்பு ஈ) பிரெஞ்சுப் புரட்சி
**விடை : ஆ) நெப்போலியனின் படையெடுப்புகள்**

2. அமெரிக்கப் பங்குசந்தைகளில் முதல் பெரும் வீழ்ச்சி ஏற்பட்ட நாள் ______. (Sep.-21)
அ) 24 அக்டோபர் 1929 ஆ) 14 அக்டோபர் 1929
இ) 24 நவம்பர் 1925 ஈ) 24 நவம்பர் 1928
**விடை : அ) 24 அக்டோபர் 1929**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ______ அமைப்பு தனித்தன்மை வாய்ந்த வியட்நாமிய தேசியத்திற்குப் புதிய அழுத்தத்தைக் கொடுத்தது. (Sep.-20)
**விடை :** வியட்மின் அல்லது வியட்நாம் விடுதலை சங்கம்

2. இலத்தீன் அமெரிக்கா, அமெரிக்காவின் ______ விரும்பவில்லை. (Sep.-20)
**விடை :** டாலர் ஏகாதிபத்தியத்தை

**V. சுருக்கமான விடையளிக்கவும்.**

**1. மன்றோ கோட்பாட்டை விளக்குக. (Dept.)**

➤ அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மன்றோ அறிவித்த கோட்பாடு "**மன்றோ கோட்பாடு**" எனப்படும். அதன்படி அமெரிக்காவின் எந்தப் பகுதியிலும் அது வடக்கோ தெற்கோ ஐரோப்பியர்கள் தலையிட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான போராகக் கருதப்படும்.

➤ இந்த பயமுறுத்தல் ஐரோப்பியர்களை அச்சங்கொள்ள வைத்து அவர்களை தென் அமெரிக்க விவகாரங்களில் இருந்து விலகியிருக்கச் செய்தது.

**2. லேட்டரன் உடன்படிக்கையின் சரத்துகள் யாவை ? (PTA-5)**

➤ லேட்டரன் உடன்படிக்கை, 1929ஆம் ஆண்டு இத்தாலிய **முசோலினிக்கும்**, ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை **போப்பாண்ட வருக்கும்** இடையில் ஏற்பட்டது. முசோலினி தனது பாசிச அரசை அங்கீகரிக்கவும், திருச்சபை வாடிகனை தனி நாடாக அங்கீகரித்தும் ஏற்பட்ட உடன்படிக்கை. இதன் பின்னர் இருவருக்கும் **நல்லுறவு** மீண்டும் வளர்ந்தது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## VI. விரிவான விடையளிக்கவும்.

**1. இத்தாலியில் முசோலினியின் எழுச்சியினைப் பற்றிக் கூறுக.** (PTA-3)

- முசோலினி, இத்தாலியில் **இரும்பு வேலை** செய்பவரின் மகன். தொடக்கப்பள்ளி ஆசிரியர் மற்றும் சிறந்த பத்திரிகையாளர். ஆற்றல் மிக்க பேச்சாளர். பாசிசக்கட்சி தொடங்கியபோது அதில் உறுப்பினரானார்.

**இத்தாலியில் போரின் தாக்கம் :**

- பொருட்களின் விலை உயர்வு–வேலை நிறுத்தங்கள்–வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையால் ஏற்பட்ட அவமானத்திற்கு அப்போதைய ஆட்சியாளர்களே காரணம் என, இத்தாலிய மக்கள் கருதினர்.

**முசோலினியின் எழுச்சி :**

- பாசிஸ்டுகள் **அதிகாரம், வலிமை, ஒழுக்கம்** ஆகியவற்றை முன்னிலைப்படுத்தியதால் அனைத்துப் பிரிவினர்களின் ஆதரவையும் பெற்றனர். 1922–இல் அக்டோபரில், முசோலினி மாபெரும் அணிவகுப்பு ஒன்றை நடத்தினார். முசோலினியின் வலிமையைக் கண்டு வியந்துபோன அரசர் **மூன்றாம் விக்டர், இம்மானுவேல்** முசோலினியை ஆட்சியமைக்க வரவேற்றார்.

**முசோலினியின் கீழ் பாசிஸ்டுகள் :**

- ஆட்சியைக் கைப்பற்றிய முசோலினி, **எதிர்க்கட்சிகளைத் தடை செய்து**, பத்திரிகைகளைத் தணிக்கைக்கு உட்படுத்தினார். வேலை நிறுத்தங்களையும், ஆலைகள் மூடுவதையும் தடைசெய்து, **தொழில் உற்பத்தியைப் பெருக்கினார்.** நிர்வாகம் மற்றும் ஆயுதப்படைகளின் தலைவராகவும் மற்ற பிற அதிகாரங்களையும் பெற்றிருந்தார்.

**போப்பாண்டவருடன் முசோலினி ஒப்பந்தம் செய்தல் :**

- **வாடிகன் போப்புடன்** 1929இல் லேட்டரன் உடன்படிக்கை செய்து கொண்டார். இதன்படி வாட்டிகன் நகரம் சுதந்திர அரசாக அங்கீகரிக்கப்பட்டது; போப் முசோலினியின் தலைமையிலான இத்தாலிய அரசை அங்கீகரித்தார்.

**2. வியட்மின் கட்சியின் உதயம் குறித்து விவரிக்கவும்.** (Sep.-20)

- இந்தோ – சீனாவில் இருந்த அரசியல் கட்சிகளில் வியட்நாம் தேசியக் கட்சியே முக்கியமானது. 1927இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி மக்கள்தொகையில் பணக்காரர்களையும் நடுத்தரப்பிரிவு மக்களையும் கொண்டிருந்தது. 1929இல் வியட்நாம் வீரர்கள் இராணுவப்புரட்சி செய்தனர்.
- கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது. இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து '**வெள்ளை பயங்கரவாதம்**' என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். வெள்ளை பயங்கரவாதத்திற்குப் பின்னர் **ஹோ சி மின் மாஸ்கோ சென்றார்.** 1930ஆம் ஆண்டை மாஸ்கோவிலும் சீனாவிலும் கழித்தார்.
- இரண்டாவது உலகப்போரின் தொடக்கத்தில் **பிரான்ஸ் ஜெர்மனியால்** 1940இல் தோற்கடிக்கப் பட்டது. ஹோ சி மின்னும் அவருடைய தோழர்களும் இச்சூழலைப் பயன்படுத்தி வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தனர். 1941 ஜனவரி திங்கள் எல்லையைக் கடந்து வியட்நாம் வந்த அவர்கள் '**வியட்நாம் விடுதலை சங்கம்**' அல்லது **வியட்மின்** எனும் அமைப்பை நிறுவினர். இது தனித்தன்மை வாய்ந்த வியட்நாமிய தேசியத்திற்குப் புதிய அழுத்தத்தைக் கொடுத்தது.

**3. ஹோ சி மின் – குறிப்பு வரைக.** (Sep.-20)

- ஹோ சி மின் 1890இல் டோக்கிங்கில் பிறந்தார். தனது 21ஆவது வயதில் ஐரோப்பா சென்றார். லண்டன் உணவுவிடுதியொன்றில் **சமையல் கலைஞராய்ப்** பணியாற்றியபின் அவர் பாரீஸ் சென்றார். பாரீஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார்.
- தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "**விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்**" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட **வியட்நாமிய தேசியவாதி** ஆக்கியது. 1921ஆம் ஆண்டு ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார். 1925இல் '**புரட்சிகர இளைஞர் இயக்கம்**' எனும் அமைப்பை நிறுவினார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# காலக்கோடு

## இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் (1900 – 1947)

1 அலகு = 10 ஆண்டுகள்

**1900**

1905 – வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம்
1906 – சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது

**1910**

1916 – தன்னாட்சி இயக்கம் / லக்னோ ஒப்பந்தம்
1917 – சம்பரான் சத்தியாகிரகம்
1918 – கேதா சத்தியாகிரகம்
1919 – ரௌலட் சட்டம் / ஜாலியன்வாலா பாக் படுகொலை

**1920**

1920 – கிலாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம்
1922 – சௌரி சௌரா சம்பவம்
1922 – சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம்
1927 – சைமன் குழு நியமனம்
1928 – மோதிலால் நேரு அறிக்கை
1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு

**1930**

1930 – உப்பு சத்தியாகிரகம் / முதல் வட்டமேசை மாநாடு
1931 – காந்தி – இர்வின் ஒப்பந்தம் / இரண்டாவது வட்டமேசை மாநாடு
1932 – வகுப்புவாரி பிரதிநிதித்துவம் / பூனா ஒப்பந்தம் / மூன்றாவது வட்டமேசை மாநாடு
1935 – இந்திய அரசு சட்டம்
1937 – மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல்

**1940**

1940 – ஆகஸ்ட் நன்கொடை / தனிநபர் சத்தியாகிரகம்
1942 – கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945 – வேவல் திட்டம் / சிம்லா மாநாடு
1946 – ராயல் இந்திய கப்பற்படை புரட்சி / அமைச்சரவை தூதுக்குழு வருகை / இடைக்கால அரசு
1947 – மௌண்ட்பேட்டன் திட்டம் / இந்தியா விடுதலை பெறுதல்

**1950**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



1 அலகு = 10 ஆண்டுகள்

**1900**

**1910**

1910 – தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்

1912 – முதல் பால்கன் போர்

1914 – முதலாம் உலகப்போர் தொடக்கம்

1917 – ரஷ்யப் புரட்சி

1918 – முதல் உலகப் போர் முடிவு

1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

**1920**

1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்

1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு

1927 – வியட்நாம் தேசியக்கட்சி உதயம்

1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

**1930**

1933 – ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்

1934 – நீண்ட பயணம்

1935 – முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது

1938 – மியூனிச் உடன்படிக்கை

1939 – இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

**1940**

1940 – பிரிட்டன் போர்

1941 – முத்துத் துறைமுக நிகழ்வு

1942 – ஸ்டாலின்கிரேடு போர்

1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு / ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

**1950**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# புவியியல்

# அலகு - 1

# இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

### பாடச்சுருக்கம்

பரப்பளவில் உலகின் ஏழாவது பெரிய நாடாகவும், ஆசியக் கண்டத்தின் இரண்டாவது பெரிய நாடாகவும் இந்தியா உள்ளது. மொத்தப் புவியியல் பரப்பளவில் இது 2.4% ஆகும். இது ஏனைய ஆசியப் பகுதிகளிலிருந்து இமயமலையால் பிரிக்கப்பட்டும் உள்ளது. ஆறு இயற்கைப் பிரிவுகளாக இந்தியா பிரிக்கப்பட்டுள்ளது.

அவை வடக்கு மலைகள், வடபெரும் சமவெளிகள், தீபகற்பப் பீடபூமிகள், பாலைவனம், கடற்கரைச் சமவெளிகள் மற்றும் தீவுகள் ஆகும். வடக்கு மலைகள் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. அவை டிரான்ஸ் இமயமலை, இமயமலை, பூர்வாஞ்சல் (அ) கிழக்கு இமயமலைகள். இராஜஸ்தான் சமவெளி, பஞ்சாப் – ஹரியானா சமவெளி, கங்கைச் சமவெளி, பிரம்மபுத்திரா சமவெளி என, நான்கு பிரிவுகளாக வடபெரும் சமவெளிகள் உள்ளன.

தீபகற்ப பீடபூமி, இரு பிரிவுகளை உள்ளடக்கியது. அவை 1. மத்திய உயர்நிலம், 2. தக்காணப் பீடபூமி. அந்தமான் நிக்கோபர் தீவுகளும் இலட்சத்தீவுகளும் இந்தியாவில் உள்ள இரண்டு பெரிய தீவுக்கூட்டங்கள் ஆகும்.

இந்தியாவின் வடிகாலமைப்பு, வட இந்திய இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நர்மதை, தபதி, மாஹி மற்றும் சபர்மதி ஆறுகள், அரபிக் கடலில் கலக்கின்றன. மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள், கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

### கற்றலின் நோக்கங்கள்

- புவியில், இந்தியாவின் அமைவிட முக்கியத்துவத்தைப்பற்றி புரிந்துகொள்ளல்
- இந்தியாவின் முக்கிய தனித்துவப் பண்புகளைக் கொண்ட இயற்கையமைப்புப் பிரிவுகளைப் பற்றி அறிந்துகொள்ளல்
- இந்திய பெரும் சமவெளிப் பகுதிகளை ஒப்பிடுதல்
- இந்தியாவின் வடிகாலமைப்பு பற்றி புரிந்துகொள்ளல்
- இமயமலையில் உருவாகும் ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகளுக்கு இடையேயான வேற்றுமைகளைப் புரிந்துகொள்ளல்

### பாடநூல் பயிற்சி வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல் ______.

   அ) 2500 கி. மீ  ஆ) 2933 கி. மீ  இ) 3214 கி. மீ  ஈ) 2814 கி. மீ

   **விடை : இ) 3214 கி. மீ**

2. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு ______.

   அ) நர்மதா  ஆ) கோதாவரி  இ) கோசி  ஈ) தாமோதர்

   **விடை : இ) கோசி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ______ என அழைக்கப்படுகிறது. (PTA-3)

அ) கடற்கரை ஆ) தீவு இ) தீபகற்பம் ஈ) நீர்ச்சந்தி

**விடை : இ) தீபகற்பம்**

4. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா, ______ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது. (PTA-4, May-22)

அ) கோவா ஆ) மேற்கு வங்காளம்

இ) இலங்கை ஈ) மாலத்தீவு

**விடை : இ) இலங்கை**

5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ______. (PTA-1, Dept.)

அ) ஊட்டி ஆ) கொடைக்கானல் இ) ஆனை முடி ஈ) ஜின்டா கடா

**விடை : இ) ஆனை முடி**

6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ______. (April-23)

அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

**விடை : இ) பாங்கர்**

7. பழவேற்காடு ஏரி, ______ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது. (PTA-1, Sep.-22)

அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா

இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்

**விடை : ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்**

## II. பொருத்துக.

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | சாங்போ | கங்கை ஆற்றின் துணை ஆறு | பிரம்மபுத்திரா |
| 2. | யமுனை | இந்தியாவின் உயர்ந்த சிகரம் | கங்கை ஆற்றின் துணை ஆறு |
| 3. | புதிய வண்டல் படிவுகள் | பிரம்மபுத்திரா | காதர் |
| 4. | காட்வின் ஆஸ்டின் (K2) | தென்கிழக்குக் கடற்கரைச் சமவெளி | இந்தியாவின் உயர்ந்த சிகரம் |
| 5. | சோழ மண்டலக் கடற்கரை | காதர் | தென்கிழக்குக் கடற்கரைச் சமவெளி |

## III. காரணம் கூறுக.

**1. இமயமலைகள் மடிப்புமலைகள் என அழைக்கப்படுகின்றன.** (May-22)

★ புவிமேலோட்டுப் பேரியக்க விசைகள் காரணமாகப் புவிமேலோடு ஒன்று நகர்ந்ததால் ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக மடிப்பு மலைகள் உருவாகின.

★ வடக்கே இருந்த யுரேசியா நிலப்பகுதியும், தெற்கே இருந்த கோண்ட்வானா நிலப்பகுதியும் ஒன்றை நோக்கி ஒன்று நகர்ந்ததால் ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக இடையில் இருந்த டெத்தீஸ் என்ற கடல் மடிக்கப்பட்டு இமயமலை உருவானது.

**2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.** (PTA-2)

★ வடஇந்திய ஆறுகள் வடக்கே உள்ள இமயமலையின் பனி ஆறுகளிலிருந்து உற்பத்தியாவதால் வருடம் முழுவதும் இவற்றில் நீர்வரத்து உள்ளது.

★ கோடைக் காலங்களில் இவ்வாறுகள் பனியாறுகள் உருகுவதினால் நீரைப் பெறுகின்றன.

★ பிற மாதங்களில் பருவக்காற்று மழைப்பொழிவின்மூலம் நீரைப் பெறுகின்றன.

★ இதனால் இவ்வாறுகள் வருடம் முழுவதும் வற்றாத நிலையில் பாய்கின்றது.

www.Padasalai.Net

3. தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப்பாயும் ஆறுகளாகும்.

★ தமிழ்நாட்டின் மேற்கே, மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்கே வங்காள விரிகுடாவும் உள்ளது. மேலும், தென்னிந்தியாவின் நிலப்பரப்பான தக்காண பீடபூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிந்துள்ளது. எனவே, தென்னிந்திய நதிகள் கிழக்கு நோக்கிப் பாய்கிறது.

## IV. வேறுபடுத்துக.

1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள். (PTA-5)

| | இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|
| 1 | இமயமலையில் உற்பத்தியாகின்றன. | மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. |
| 2 | இவை வற்றாத ஆறுகள்.<br>எ – கா : கங்கை, சிந்து | இவை வற்றும் ஆறுகள்.<br>எ – கா : காவேரி, மகாநதி |
| 3 | இவை வட இந்தியாவில் பாய்கின்றன. | இவை தென் இந்தியாவில் பாய்கின்றன. |

2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள். (PTA-1, Sep.-22, April-23)

| | மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| 1. | இவை தொடர்ச்சியான மலைகளாகும். | இவை தொடர்ச்சியற்ற மலைகளாகும். |
| 2. | இம்மலைகள் மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கின்றன. | இம்மலைகள் தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் அமைந்துள்ளன. |
| 3. | கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உருவாகின்றன. | இவை மிகப்பெரிய டெல்டாவை உருவாக்குகின்றன. |

3. மேற்குக் கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்குக் கடற்கரைச் சமவெளி. (Sep.-21)

| | மேற்குக் கடற்கரைச் சமவெளி | கிழக்குக் கடற்கரைச் சமவெளி |
|---|---|---|
| 1. | ரானாஆப் கட்ச்முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. | மேற்கு வங்காளம்முதல் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது. |
| 2. | வடபகுதி, கொங்கணக் கடற்கரை எனப்படுகிறது. | வடபகுதி, “வடசர்க்கார் கடற்கரை “எனப்படுகிறது. |
| 3. | தென்பகுதி, மலபார் கடற்கரை எனப்படுகிறது. | தென்பகுதி, சோழமண்டலக் கடற்கரை எனப்படுகிறது. |

## V. சுருக்கமாக விடையளி.

1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக. (Dept.)

- பாகிஸ்தான்
- ஆப்கானிஸ்தான்
- சீனா
- நேபாளம்
- பூடான்
- வங்காளதேசம்
- மியான்மர்
- இலங்கை.

2. இந்தியத் திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறுக. (PTA-2, Sep.-22)

★ இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சலப் பிரதேசத்தில் மேற்கில் உள்ள குஜராத்தைக் காட்டிலும், “இரண்டு மணிநேரம்” முன்னதாக சூரியன் உதயமாகிறது.

★ இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக மத்திய தீர்க்கரேகையான 82$^{o}$30’ கிழக்குத் தீர்க்கரேகையின் தலநேரம், இந்தியத் திட்டநேரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத்தீர்க்கரேகை மிர்சாபூர் (அலகாபாத்) வழியாகச் செல்கிறது.

★ இது கிரீன்வீச் திட்ட நேரத்தை விட **5மணி 30 நிமிடம்** முன்னதாக உள்ளது.

3. தக்காணப் பீடபூமி – குறிப்பு வரைக.

★ தக்காணப் பீடபூமி, தீபகற்பப் பீடபூமியில் அமைந்துள்ள மிகப்பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும். இது தோராயமாக **முக்கோண வடிவம்** கொண்டது.

★ சுமார் **7 லட்சம் சதுர கி.மீ.** பரப்பளவு கொண்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து **500 மீ முதல் 1000 மீ உயரம் வரையும்** அமைந்துள்ளது.



www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


**4. இந்தியாவின் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைப் பற்றிக் கூறுக.** (PTA-3)

**நர்மதை :**

★ மத்தியப்பிரதேசத்தில் அமர்கண்டாக் பகுதியில் உற்பத்தியாகி மேற்கு நோக்கி பாய்ந்து காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது. இதன் நீளம் 1312 கி. மீ. ஆகும்.

**தபதி :**

★ இந்நதி மத்தியப்பிரதேசத்திலுள்ள மூல்டாய் என்ற இடத்தில் உற்பத்தியாகி காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது. இதன் நீளம் 724 கி. மீ. ஆகும்.

**5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.** (PTA-4, May-22)

★ இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இலட்சத்தீவு, முருகைப் பாறைகளால் ஆனது.

★ இத்தீவுகள், சுமார் 32 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டதாகும்.

★ இதன் நிர்வாகத் தலைநகரம் கவரட்டி ஆகும்.

★ இங்கு மனிதர்கள் வசிக்காத புகழ் பெற்ற பறவைகள் சரணாலயம் ஒன்று உள்ளது. (பிட் தீவு)

## VI. ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

**1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.** (PTA-1, Sep.-21,22)

இமயமலை மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது.

• ட்ரான்ஸ் இமயமலை • இமயமலைகள் • கிழக்கு இமயமலை

**டிரான்ஸ் இமயமலைகள் (மேற்கு இமயமலைகள்) :**

★ இம்மலைகள், **ஜம்மு–காஷ்மீர்** மற்றும் **திபெத் பீடபூமியில்** அமைந்துள்ளது. இவை, '**திபெத்தியன் இமயமலை**' எனவும் அழைக்கப்படுகிறது.

★ இப்பகுதியில் காணப்படும் பாறை அமைப்புகள், கடலடி உயிரினப் படிமங்களைக் கொண்ட **டெர்சியரி கிரானைட்** பாறைகளாகும்.

★ முக்கியமான மலைத்தொடர்கள், ஜாஸ்கர், லடாக், கைலாஸ் மற்றும் காரகோரம் ஆகும்.

**இமயமலைகள் :**

★ இவை வடக்கு மலைகளின் பெரிய பகுதியாக அமைந்துள்ளது. இது ஓர் இளம் மடிப்பு மலையாகும். இது பல மலைத்தொடர்களை உள்ளடக்கியது.

★ இவை, **பெரிய இமயமலைகள் (இமாத்ரி), சிறிய இமயமலை (இமாச்சல்), வெளி இமயமலை (சிவாலிக்)** என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

**பூர்வாஞ்சல் குன்றுகள்:**

★ இவை, இமயமலையின் கிழக்குக் கிளையாகும். இது **வடகிழக்கு மாநிலங்களில்** பரவியுள்ளது.

★ பெரும்பாலான குன்றுகள், **மியான்மர் மற்றும் இந்திய** எல்லைகளுக்கிடையே காணப்படுகின்றன.

**இமயமலையின் முக்கியத்துவம்:**

★ தென்மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வட இந்தியப் பகுதிக்குக் கனமழையைக் கொடுக்கிறது.

★ வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது.

**எ – கா :** சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா

★ இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.

★ பல கோடைவாழிடங்களும், கோயில்களும் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.

★ வனப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை அளிக்கிறது.

★ இமயமலை, பல்லுயிர் மண்டலத்திற்குப் பெயர் பெற்றது.

★ இந்திய துணைக் கண்டத்தில் **இயற்கை அரனாக** அமைந்துள்ளது.

★ மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. **தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

**தீபகற்ப இந்திய ஆறுகள்:**

★ தென் இந்தியாவில் பாயும், ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன.

★ பெரும்பாலான ஆறுகள், மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.

★ இவை, பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படும்.

★ தீபகற்ப ஆறுகளை அவை பாயும் திசையின் அடிப்படையில் கிழக்கு நோக்கிப் பாயும் ஆறுகள், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**கிழக்கு நோக்கிப் பாயும் ஆறுகள்:**

**அ. மகாநதி :**

★ இந்நதி சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள ராய்ப்பூர் மாவட்டத்தில் சிகாவிற்கு அருகில் உற்பத்தியாகி, ஒடிசா மாநிலத்தின் வழியாகச் **சுமார் 851 கி.மீ** நீளத்தில் பாய்கிறது. மகாநதி, பல கிளையாறுகளாகப் பிரிந்து, டெல்டாவை உருவாக்குகிறது. இந்நதி, **வங்காள விரிகுடாவில்** கலக்கிறது.

**ஆ. கோதாவரி :**

★ தீபகற்ப இந்தியாவில் பாயும் **மிக நீளமான ஆறாகும்.** நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. இந்நதி, விருத்தகங்கா எனவும் அழைக்கப்படுகிறது. கோதாவரி டெல்டா பகுதியில், நன்னீர் ஏரியான கொல்லேறு ஏரி அமைந்துள்ளது.

**இ. கிருஷ்ணா :**

★ மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் மகாபலேஷ்வர் என்ற பகுதியில் ஊற்றாக உருவாகிறது. இது, **தீபகற்ப ஆறுகளில் இரண்டாவது மிகப்பெரிய நதியாகும். இந்நதி ஆந்திரப் பிரதேசத்தின்** வழியாக பாய்ந்து ஹம்சலாதேவி என்ற இடத்தில் **வங்காள விரிகுடாவில்** கலக்கிறது.

**ஈ. காவிரி :**

★ காவிரி ஆறு, கர்நாடக மாநிலத்தில் **குடகு மலையிலுள்ள தலைக்காவிரியில்** உற்பத்தியாகிறது. இது, **தென் இந்தியாவின் கங்கை** என்றும் அழைக்கப்படுகிறது. **பூம்புகார்** என்ற இடத்தில் வங்கக் கடலில் கலக்கிறது.

**மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் :**

**அ) நர்மதை :**

★ மத்தியப்பிரதேசத்தில் உள்ள **அமர்கண்டாக் பீடபூமியில்** உற்பத்தியாகிறது. இது, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலேயே **நீளமானதாகும்.**

★ இது 27 கி.மீ நீளத்திற்கு ஒரு நீண்ட கழிமுகத்தை உருவாக்கி காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

**ஆ) தபதி :**

★ தபதி ஆறு தீபகற்ப இந்தியாவின் முக்கிய ஆறுகளில் ஒன்றாகும். இந்நதி, **724 கி.மீ நீளத்தையும், 65145 ச.கி.மீ.** பரப்பளவு வடிநிலத்தையும் கொண்டது. இந்நதி, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பெட்டூல் மாவட்டத்தில் **முல்டாய்** என்ற இடத்திலிருந்து உற்பத்தியாகிறது. இது காம்பே வளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.

3. **கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.** (PTA-4)

★ வடிகாலமைப்பு என்பது முதன்மையாறுகளும், துணையாறுகளும் ஒருங்கிணைந்து மேற்பரப்பு நீரைக் கடலிலோ, ஏரிகளிலோ, நீர் நிலைகளிலோ சேர்க்கும் செயலாகும். முதன்மை ஆறுகளும், துணையாறுகளும் இணைந்து பாயும் பரப்பளவு, **வடிகால் கொப்பரை** என்று அழைக்கப்படுகின்றது.

www.Padasalai.Net

**கங்கை நதி தொகுப்பு:**

- ★ கங்கை நதியின் தொகுப்பு இந்தியாவின் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டதாகும். கங்கையாற்றின் தொகுப்பு **8,61,404 ச.கி.மீ. பரப்பளவில் பாய்கிறது.** கங்கைச் சமவெளியில் பல நகரங்கள் ஆற்றங்கரையையொட்டியும் அதிக மக்களடர்த்தி கொண்டதாகவும் உள்ளன.
- ★ கங்கை ஆறு, **உத்தரகாண்ட் மாநிலத்தில்** உள்ள **உத்தர் காசி** மாவட்டத்தில் **7010மீ உயரத்தில்** கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகீரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது. இந்நதியின் நீளம் **சுமார் 2525 கி.மீ.** ஆகும்.
- ★ வட பகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டக், கோசி மற்றும் தென் பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன. **வங்கதேசத்தில், கங்கை நதி பத்மா** என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
- ★ **கங்கை மற்றும் பிரம்மபுத்திரா** ஆகிய இரண்டு ஆறுகள் சேர்ந்து, **உலகிலேயே மிகப் பெரிய டெல்டாவை** உருவாக்கிப் பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

## PTA & Exam Questions (Interior)

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. இந்தியாவிற்குச் சொந்தமான இரண்டு தீவுகள் எவை ? (PTA-6)
   அ) அந்தமான் மற்றும் மாலத்தீவு.
   ஆ) அந்தமான் நிக்கோபர் மற்றும் லட்சத் தீவுகள்.
   இ) மாலத்தீவு மற்றும் நிக்கோபர். ஈ) இலங்கை மற்றும் அந்தமான்.
   **விடை : ஆ) அந்தமான் நிக்கோபர் மற்றும் லட்சத் தீவுகள்.**
2. ______ ஆறு, விருத்த கங்கா என அழைக்கப்படுகிறது. (PTA-6)
   அ) கிருஷ்ணா ஆ) கோதாவரி இ) நர்மதை ஈ) காவிரி
   **விடை : ஆ) கோதாவரி**
3. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும். (Sep.-20)
   அ) கொல்லேறு ஏரி ஆ) வேம்பநாடு ஏரி இ) சிலிகா ஏரி ஈ) பழவேற்காடு ஏரி
   **விடை : ஆ) வேம்பநாடு ஏரி**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ______ இந்தியாவின் மிகப் பெரிய வடிகால் அமைப்பு ஆகும். (PTA - 3)
   **விடை : கங்கை ஆறு**
2. ______ ஆறு விருத்த கங்கா என அழைக்கப்படுகிறது. (PTA -6)
   **விடை : கோதாவரி**

**VI. சுருக்கமாக விடையளி.**

**1. இந்தியாவின் அட்ச மற்றும் தீர்க்க ரேகைகளின் பரவலைக் குறிப்பிடுக.** (PTA-5)

- ➤ **அட்ச ரேகை** – இந்தியா 8°4’ வட அட்சம் முதல் 37°6’ வட அட்சம் வரையிலும் பரவியுள்ளது.
- ➤ **தீர்க்க ரேகை** – 68°7’ கிழக்குத் தீர்க்கம் முதல் 97°25’ கிழக்குத் தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.

**2. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.** (May-22)

- கிழக்கு – வங்காள விரிகுடா
- மேற்கு – கேரளா
- வடக்கு – ஆந்திரப்பிரதேசம்
- வடமேற்கு – கர்நாடகா
- தெற்கு – இந்தியப் பெருங்கடல்

www.Padasalai.Net

## VII. ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

**1. தீபகற்ப பீடபூமிகள் பற்றி விவரிக்கவும். (April-23)**

- தீபகற்ப பீடபூமிகள் இந்திய இயற்கை அமைப்பின் "மூன்றாவது" பிரிவாகும்.
- தீபகற்ப பீடபூமி வட இந்திய சமவெளிக்கு தெற்கே அமைந்துள்ளது. இது சுமார் 16 லட்சம் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டு (இது நாட்டின் மொத்த பரப்பளவில் சுமார் பாதியாகும்.) இந்தியாவின் மிகப்பெரிய இயற்கைப் பிரிவாக உள்ளது. தீபகற்ப பீடபூமி தொன்மையான பாறை அமைப்புகளையும், பல குன்றுகளையும் பல்வேறு சிறு பீடபூமிகளையும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளால் பிளவுபட்டும் காணப்படுகின்றன.
- வடமேற்கே ஆரவல்லி மலைத்தொடர், வடக்கு மற்றும் வடகிழக்கே பண்டல்கண்ட் உயர்நிலப்பகுதி, கைமூர், ராஜ்மகால் குன்றுகள், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆகிய இப்பீடபூமியின் எல்லைகளாக அமைந்துள்ளன.
- இப்பீடபூமியின் பெரும்பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 600 மீ. உயரத்தைக் கொண்டது. ஆனைமலையில் அமைந்துள்ள 2695 மீ உயரமுடைய ஆனைமுடிச் சிகரம் இப்பீடபூமியின் உயர்ந்த சிகரமாகும். இப்பீடபூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிந்துள்ளது. இது கோண்டுவானா நிலப்பகுதியின் ஒரு பகுதியாகும். ஆற்றின் மூப்பு நிலைக் காரணமாக ஆறுகள், அகலமான மற்றும் ஆழமற்ற பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன.
- நர்மதை ஆறு தீபகற்ப பீடபூமியை இரு பெரும் பகுதிகளாக பிரிக்கின்றது. இதன் வட பகுதியை மத்திய உயர்நிலங்கள் என்றும், தென் பகுதியை தக்காண பீடபூமி என்றும் அழைப்பர். விந்திய மலைக்கு தென் பகுதியில் பாயும் ஆறுகளான கோதாவரி, காவிரி, மகாநதி, கிருஷ்ணா போன்றவை கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.
- விந்திய மலையின் தென்பகுதியிலுள்ள பிளவு பள்ளத்தாக்குகளின் வழியே நர்மதை மற்றும் தபதி ஆறுகள் மேற்கு நோக்கி பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன.

www.Padasalai.Net

# அலகு - 2

# இந்தியா - காலநிலை, மற்றும் இயற்கைத் தாவரங்கள்

## பாடச்சுருக்கம்

அயன மண்டலப் பருவக்காற்றுக் காலநிலை என, இந்தியக் காலநிலை வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு நான்கு பருவ காலங்கள் உள்ளன. அவை : குளிர்காலம், கோடைகாலம், தென்மேற்குப் பருவக்காற்றுக் காலம், வடகிழக்குப் பருவக்காற்றுக் காலம் ஆகும். மனிதனின் நேரடி (அ) மறைமுகத் தலையீடின்றி இயற்கைச் சூழலில் வளரும் தாவர இனத்தை நாம் 'இயற்கைத் தாவரம்' என அழைக்கிறோம்.

ஒரு பகுதியில் இயல்பாகவே நீண்ட காலமாக இயற்கையாக வளரும் மரங்கள், புதர்கள், செடிகொடிகள் போன்ற அனைத்துத் தாவர உயிரினங்களும் இதற்குள் அடங்கும். இயற்கைத் தாவரங்களின் பரவல் மற்றும் வளர்ச்சியைக் காலநிலை, மண்வகைகள் மற்றும் நிலத்தோற்றங்கள் ஆகிய காரணிகள் கட்டுப்படுத்துகின்றன.

இயற்கைத் தாவரங்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை அயன மண்டலப் பசுமை மாறாக் காடுகள், அயன மண்டல இலையுதிர்க் காடுகள், அயன மண்டல வறண்ட காடுகள், பாலை மற்றும் அரைப்பாலைவனக் காடுகள், மலைக்காடுகள், ஆல்பைன் காடுகள் மற்றும் சதுப்புநிலக் காடுகள் ஆகும். அட்ச தீர்க்கங்கள், கடல் மட்டத்திலிருந்து உயரம், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, பருவக்காற்று, நிலத்தோற்றம், ஜெட் காற்றுகள் போன்றவை, இந்தியக் காலநிலையைப் பாதிக்கும் காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன.

## கற்றலின் நோக்கங்கள்

- இந்தியக் காலநிலையைக் கட்டுப்படுத்தும் காரணிகளை விவரித்தல்
- இந்திய பருவகாலங்களின் பண்புகளை புரிந்து கொள்ளுதல்
- இந்தியாவின் மழைப்பரவலைத் தெரிந்துகொள்ளுதல்
- இந்தியாவின் பல்வேறு இயற்கைத் தாவரவகைகள் மற்றும் வன உயிரினங்கள் பற்றி கற்றறிதல்

## பாடநூல் பயிற்சி வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ______. **(Sep.-21)**

அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) பஞ்சாப் ஈ) மத்தியப் பிரதேசம்

**விடை : இ) பஞ்சாப்**

2. கேரளா மற்றும் கர்நாடகக் கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள், விரைவில் முதிர்வதற்கு ______ காற்றுகள் உதவுகின்றன.

அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ்

இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றோட்டம்

**விடை : இ) மாஞ்சாரல்**

3. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ______ ஆகும். **(Dept., PTA-1, Sep.-22)**

அ) சம மழைக்கோடுகள் ஆ) சம அழுத்தக்கோடுகள்

இ) சமவெப்பக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்

**விடை : அ) சம மழைக்கோடுகள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

4. இந்தியாவின் காலநிலை, ______ ஆகப் பெயரிடப்பட்டுள்ளது.

அ) அயன மண்டல ஈரக் காலநிலை ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை

இ) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை ஈ) மித அயனமண்டலக் காலநிலை

**விடை : இ) அயனமண்டலப் பருவக்காற்றுக் காலநிலை**

5. பருவக்காற்றுக் காடுகள், இவ்வாறு அழைக்கப்படுகின்றன. (PTA-4)

அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் ஆ) இலையுதிர் காடுகள்

இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக் காடுகள்

**விடை : ஆ) இலையுதிர் காடுகள்**

6. சேஷாசலம் உயிர்க்கோளப் பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் ______.

அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப் பிரதேசம் இ) மத்தியப் பிரதேசம் ஈ) கர்நாடகா

**விடை : ஆ) ஆந்திரப் பிரதேசம்**

7. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்புப் பெட்டகத்தின் ஓர் அங்கமாக இல்லாதது ______.

அ) நீலகிரி ஆ) அகத்திய மலை இ) பெரிய நிக்கோபார் ஈ) கட்ச்

**விடை : ஈ) கட்ச்**

## II. பொருத்துக.

**விடை :**

| | | | |
|---|---|---|---|
| 1. | சுந்தரவனம் | பாலை மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள் | மேற்கு வங்காளம் |
| 2. | உயிர்பன்மைச் சிறப்பு பகுதிகள் | அக்டோபர், டிசம்பர் | இமயமலைகள் |
| 3. | வடகிழக்குப் பருவக் காற்று | கடற்கரைக் காடுகள் | அக்டோபர், டிசம்பர் |
| 4. | அயன மண்டல முட்புதர் காடுகள் | மேற்கு வங்காளம் | பாலை மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள் |
| 5. | கடலோரக் காடுகள் | இமயமலைகள் | கடற்கரைக் காடுகள் |

## III. கீழ்க்காணும் வாக்கியங்களைக் கருத்தில்கொண்டு கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. **கூற்று** : இமய மலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது. (PTA-1)

**காரணம்** : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றைத் தடுத்து, இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி; கூற்றுக்கான காரணம் சரி.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி; கூற்றுக்கான காரணம் தவறு.

இ) கூற்றுச் சரி; காரணம் தவறு.

ஈ) கூற்றுத் தவறு; காரணம் சரி.

**விடை : அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி**

## IV. பொருந்தாத விடையைத் தேர்வு செய்க.

1. ஓதக்காடுகள் இதனைச் சுற்றிக் காணப்படுகிறது.

அ) பாலைவனம் ஆ) கங்கை பிரம்மபுத்ரா டெல்டா

இ) கோதாவரி டெல்டா ஈ) மகாநதி டெல்டா

**விடை : அ) பாலைவனம்**

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


2. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் (PTA-3)

அ) அட்சப் பரவல் ஆ) உயரம்

இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் ஈ) மண்

**விடை : ஈ) மண்**

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. காலநிலையை பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.** (Sep.-21)

**காலநிலையை பாதிக்கும் காரணிகள் :**

★ அட்சப் பரவல், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, கடல் மட்டத்திலிருந்து உயரம், பருவக்காற்று, நிலத்தோற்றம் மற்றும் ஜெட் காற்றுகள்.

**2. "வெப்பக் குறைவு விகிதம்" என்றால் என்ன?** (April-23)

★ புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல, வளிமண்டலத்தில் ஒவ்வொரு **1000 மீட்டர்** உயரத்திற்கும் **6.5°C** என்ற அளவில் **வெப்பநிலை** குறைகிறது.

★ இதற்கு '**வெப்பக் குறைவு விகிதம்**' என்று பெயர்.

**3. "ஜெட் காற்றோட்டங்கள்" என்றால் என்ன?** (PTA-1)

★ வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட் காற்றோட்டங்கள்" எனப்படுகின்றன.

**4. பருவக் காற்றுக் குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.**

★ இந்தியாவின் **காலநிலையைப் பாதிக்கும்** மிக முக்கியக் காரணி பருவக்காலக் காற்றாகும். **பருவங்களுக்கேற்ப** திசைகளை மாற்றிக்கொண்டு வீசும் காற்றுகள் பருவக்காற்று எனப்படும்.

★ இந்தியா ஓர் ஆண்டின் கணிசமான காலத்தில், பருவக்காற்றுகளின் தாக்கத்திற்கு உள்ளாகிறது.

★ இந்தியா தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவக் காற்றுகளால் மழை பெறுகிறது.

**5. இந்தியாவின் நான்கு பருவ காலங்களைக் குறிப்பிடுக.** (PTA-3)

★ **குளிர்காலம்** : ஜனவரி முதல் பிப்ரவரி வரை

★ **கோடைக்காலம்** : மார்ச் முதல் மே வரை

★ **தென்மேற்குப் பருவக்காற்றுக் காலம் அல்லது மழைக்காலம்** : ஜூன் முதல் செப்டம்பர் வரை

★ **வடகிழக்குப் பருவக் காற்றுக் காலம்** : அக்டோபர் முதல் டிசம்பர் வரை.

**6. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?** (PTA-4, Sep.-20)

★ தென்மேற்குப் பருவக்காற்றுத் தொடங்குவதற்கு முன், வட இந்தியாவின் வெப்பநிலையானது 46°C வரை உயருகிறது.

★ இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய தொடக்கம் பருவமழை வெடிப்பு எனப்படுகிறது.

**7. அதிக மழைபெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.** (May-22)

★ இந்தியாவில் மேற்குக் கடற்கரை, அசாம், மேகாலயாவின் தென்பகுதி, திரிபுரா, நாகாலாந்து, மற்றும் அருணாச்சலப் பிரதேசம் போன்ற பகுதிகள், **200 செ.மீட்டருக்கும்** அதிகமான மழைப் பொழிவைப் பெறுகின்றன.

**8. இந்தியாவில் சதுப்புநிலக்காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.**

★ கங்கை–பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளிலும், மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும், சதுப்புநிலக்காடுகள் காணப்படுகின்றன.

★ சதுப்பு நிலக்காடுகள் "மாங்குரோவ் காடுகள்" மற்றும் "ஓதக்காடுகள்" எனவும் அழைக்கப் படுகின்றன.

★ **எ – கா** : சுந்தரவனக்காடுகள் – உலகின் மிகப் பெரிய சதுப்பு நிலக்காடுகள்.

**9. இந்தியாவில் உள்ள உயிர்க்கோளக் காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.** (PTA-6)

★ மன்னார் வளைகுடா, நீலகிரி, சுந்தரவனம், அகத்தியமலை, கஞ்சன்ஜங்கா, சிம்லிபால் ஆகியவை இந்தியாவில் உள்ள உயிர்க்கோளக் காப்பகங்கள் ஆகும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## VI. வேறுபடுத்துக.

**1. வானிலை மற்றும் காலநிலை.** (Dept, May-22)

| | வானிலை | காலநிலை |
|---|---|---|
| 1 | ஒரு குறிப்பிட்ட இடத்தின் வளிமண்டலத் தன்மையைக் குறிக்கிறது. | ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30 – 35 வருட சராசரி வானிலையைக் குறிக்கிறது. |
| 2 | வளிமண்டலத்தின் அன்றாட நிலை வானிலை எனப்படுகிறது. | இது ஓரிடத்தின் நீண்ட கால வானிலை காலநிலை எனப்படுகிறது. |
| 3 | இது ஓரிடத்தின் வெப்பநிலை, அழுத்தம், காற்று ஈரப்பதம், மழை போன்றவற்றைக் கையாள்கிறது. | இது அட்சரேகை, உயரம், கடலிலிருந்து, தூரம், காற்று, மலைகளின் நிலை போன்றவற்றால் தீர்மானிக்கப்படுகிறது. |

**2. அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் மற்றும் இலையுதிர் காடுகள்.** (PTA-4)

| | அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் | இலையுதிர் காடுகள் |
|---|---|---|
| 1 | ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீக்கும் மேல் பெறுகிற பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன. | ஆண்டு மழைப்பொழிவு 100–200 செ.மீ வரை பெறுகிற பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன. |
| 2 | ஆண்டு வெப்பநிலை 22°Cக்கும் அதிகமாகவும், சராசரி ஆண்டு ஈரப்பதம் 70 சதவீதமும் தேவை. | ஆண்டு வெப்பநிலை 27°C ஆகவும், சராசரி ஒப்பு ஈரப்பதம் 60 முதல் 70 சதவீதமும் தேவை. |
| 3 | **மரங்கள்** : எபனி, ரோஸ் மரம், சின்கோனா. | **மரங்கள்** : தேக்கு, சால், சிசம், சந்தன மரம். |

**3. வடகிழக்குப் பருவக் காற்று மற்றும் தென்மேற்குப் பருவக்காற்று.** (PTA-6)

| | வடகிழக்குப் பருவக்காற்று | தென்மேற்குப் பருவக்காற்று |
|---|---|---|
| 1 | இந்தியாவிலிருந்து தெற்கு நோக்கி மாறத் தொடங்குகிறது. | இந்தியப் பெருங்கடலில் இருந்து தென்மேற்குத் திசையில் வீசுகிறது. |
| 2 | அக்டோபர் – நவம்பர் மாதங்களில் மழை பெய்யும். | ஜூன் – செப்டம்பர் மாதங்களில் மழை பெய்யும். |
| 3 | இப்பருவக்காற்றின் மூலம் கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகாவின் உட்பகுதிகள், மழைப் பொழிவின் 35 சதவீதத்தைப் பெறுகின்றன. | இந்தியாவின் ஒட்டுமொத்த மழைப்பொழிவின் 75% மழைப்பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது. (மேற்கு கடற்கரைப் பகுதிகள் மற்றும் அசாம், மேகாலயா – மௌசின்ராம் மிக கனமழை) |

## VII. காரணம் கண்டறிக.

**1. இந்தியா அயன மண்டலப் பருவக்காற்றுக் காலநிலையைப் பெற்றுள்ளது.**

இந்தியாவின் பெரும்பகுதி அயன மண்டலப் பகுதியில் உள்ளது. இந்தியாவின் **காலநிலை பருவக்காற்றுகளின்** தாக்கத்திற்கு உள்ளாகிறது. இக்காற்றுகள் **20°வட அட்சம்முதல் 20° தென் அட்சம்வரை** வீசுகின்றன.

பருவமழை என்பது, இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணியாகும்.

**2. மலைப்பகுதிகள், சமவெளிகளை விடக் குளிரானவை.** (PTA-5)

கடல் மட்டத்திலிருந்து **அதிக உயரத்தில்** உள்ளதால், மலைப்பகுதிகள் குளிர்ச்சியாக உள்ளது. மேலும், உயரே செல்லச்செல்ல **1000 மீட்டருக்கு 6.5°C** என்ற அளவில் வெப்பம் குறையும்.

எ – கா : சென்னை – வெப்பம்; உதகை – குளிர்)

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## VIII. விரிவான விடையளி.

**1. தென்மேற்குப் பருவக் காற்று குறித்து எழுதுக.** (Dept., PTA-2, May-22, April-23)

**தென்மேற்குப் பருவக்காற்றுக் காலம் அல்லது மழைக்காலம் : [ஜூன்முதல் செப்டம்பர் வரை]**

★ இந்தியக் காலநிலையின் முக்கிய அம்சமாகத் **தென்மேற்குப் பருவக்காற்று** விளங்குகிறது. இப்பருவக்காற்று பொதுவாக **ஜூன் முதல் வாரத்தில்** இந்தியாவின் **தென் பகுதியில்** தொடங்கி, **ஜூலை 15இல்** அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.

★ உலகளாவிய காலநிலை நிகழ்வான **எல்நினோ,** தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தென்மேற்குப் பருவக்காற்று தொடங்குவதற்கு முன், வட இந்தியாவின் வெப்பநிலையானது 46°C வரை உயருகிறது.

★ இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய தொடக்கம் **பருவமழை வெடிப்பு** எனப்படுகிறது. இக்காற்று, இந்தியாவின் தென்முனையை அடையும்பொழுது, இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. ஒரு கிளை **அரபிக்கடல் வழியாகவும்,** மற்றொரு கிளை **வங்காள விரிகுடா வழியாகவும்** வீசுகிறது.

★ தென்மேற்குப் பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை, மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதிப் **பலத்த மழைப்பொழிவைத்** தருகிறது. வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் **மியான்மரை நோக்கி** வீசுகிறது.

★ மேகாலயாவிலுள்ள **மௌசின்ராமில்** மிகக் கனமழையைத் தருகிறது. இந்தியாவின் ஒட்டு மொத்த மழைப்பொழிவில் **75 சதவீத** மழைப்பொழிவானது, **இப்பருவக்காற்றுக் காலத்தில்** கிடைக்கிறது.

**2. இந்தியக் காடுகள் பற்றி விவரிக்கவும்.** (PTA-6)

★ காலநிலை, மண் வகைகள், மழைப்பொழிவு மற்றும் நிலத்தோற்றங்கள் ஆகியவை இயற்கைத் தாவரங்களான காடுகளின் வகைகளுக்கு முக்கிய காரணங்களாகும். காடுகளின் வகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் :**

★ ஆண்டு மழைப்பொழிவு 200 செ. மீட்டருக்கு மேலுள்ள பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப் படுகின்றன. இப்பகுதியின் **சராசரி ஆண்டு ஈரப்பதம்** 70 சதவீதமாகும்.

★ மேற்குத்தொடர்ச்சி மலை, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, அந்தமான் நிக்கோபர் தீவுகள், கேரளா, அசாம், மேற்கு வங்காளம், நாகலாந்து, திரிபுரா, மிசோரம், மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில், **இவ்வகைக் காடுகள்** காணப்படுகின்றன.

★ இரப்பர், எபனி, ரோஸ்மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்கு காணப்படுகின்றன.

**அயன மண்டல இலையுதிர்காடுகள் :**

★ இக்காடுகள் ஆண்டுச் சராசரி மழைப்பொழிவு அளவு சுமார் **100 செ.மீமுதல் 200செ.மீ** வரையுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. இதனைப் '**பருவக்காலக் காடுகள்**' என்றும் அழைக்கலாம்.

★ இக்காடுகளில் உள்ள மரங்கள், வசந்த காலத்திலும் கோடைக்காலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. **தேக்கு மற்றும் சால்** இங்கு வளரும் மிக முக்கிய மரங்களாகும்.

★ சந்தன மரம், ரோஸ்மரம், குசம், மாகு, பாலாங், ஆம்லா, மூங்கில், சிசம் மற்றும் படாக் ஆகியவை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்களாகும்.

**அயன மண்டல வறண்ட காடுகள் :**

★ ஆண்டு மழைப்பொழிவு **50 செ.மீ முதல் 100 செ.மீ வரை** உள்ள பகுதிகளில், இவ்வகைக் காடுகள் காணப்படுகின்றன. இவை ஒரு இடைநிலை வகைக் காடுகளாகும்.

★ இலுப்பை, ஆவாரம் பூ மரம், பலா, மஞ்சக்கடம்பு, கருவேலம் மற்றும் மூங்கில் ஆகியவை மரங்களாகும்.

**பாலைவன மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள் :**

★ இக்காடுகளை '**முட்புதர்க் காடுகள்**' என்றும் அழைப்பர். இவை ஆண்டு சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்குக் குறைவாகவும் அதிக வெப்பமும் குறைவான ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன.

★ கருவேலம், சீமைக் கருவேல மரம், ஈச்சமரம் போன்ற மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

**அல்பைன் / இமயமலைக்காடுகள் :**

★ உயரம் மற்றும் மழையளவின் அடிப்படையில் இக்காடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**கிழக்கு இமயமலைக்காடுகள், மேற்கு இமயமலைக்காடுகள் :**

**அல்பைன் காடுகள் :**

★ சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகளின் உயரமான பகுதிகளில் இவ்வகைக்காடுகள் காணப்படுகின்றன.

★ இவ்வகைக்காடுகள், ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன.

★ ஒக், சில்வர், பிர், பைன் மற்றும் ஜூனிபர் மரங்கள், இக்காட்டின் முக்கிய மரவகைகளாகும்.

**மாங்குரோவ் காடுகள் :**

★ இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழிமுகப் பகுதிகளில் காணப்படுகின்றன.

★ கங்கை–பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில், உலகில் மிகப் பெரிய சதுப்புநிலக் காடுகள் (சுந்தரவனக் காடுகள்) உள்ளன.

★ மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் காணப்படுகின்றன. இவை, "**மாங்குரோவ் காடுகள்**" என்றும் அழைக்கப்படுகின்றன.

## PTA & Exam Questions (Interior)

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. உலகில் மிக அதிக மழை பெறும் பகுதியான மௌசின்ராம் எங்கு அமைந்துள்ளது ? (PTA-6)

அ) இந்தியா ஆ) நேபாளம் இ) பூடான் ஈ) வங்காளதேசம்

**விடை: அ) இந்தியா**

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அல்பைன் காடுகளில் காணப்படும் மரங்கள், _____ என அழைக்கப்படுகின்றன. (Sep.-20)

**விடை : ஊசியிலை மரங்கள்**

**IX. விரிவான விடையளி.**

**1. இந்தியக் காலநிலையைப் பாதிக்கும் காரணிகளை விவரி.** (PTA-5)

**இந்தியக் காலநிலையை பாதிக்கும் காரணிகள் :**

➤ அட்சங்கள் கடல் மட்டத்திலிருந்து உயரம், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, பருவக்காற்று, நிலத்தோற்றம், ஜெட் காற்றுகள் போன்றவை, இந்தியக் காலநிலையைப் பாதிக்கும் காரணிகளாகும்.

**அட்சங்கள் :**

➤ இந்தியா 8°4' வட அட்சம் முதல் 37°6' வட அட்சம் வரை அமைந்துள்ளது. 23°30' வட அட்சமான கடகரேகை, நாட்டை இரு சமபாகங்களாகப் பிரிக்கிறது.

➤ கடகரேகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் அதிகவெப்பமும் மிகக் குளிரற்ற சூழலும் நிலவுகிறது. கடகரேகைக்கு வடக்கே உள்ள பகுதிகள், மித வெப்பக் காலநிலையைக் கொண்டுள்ளது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


**உயரம் :**

- புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5C என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது. எனவே, சமவெளிப் பகுதிகளைக் காட்டிலும் மலைப்பகுதிகள் குளிராக இருக்கும்.
- உதகை, தென்னிந்தியாவின் இதர மலை வாழிடங்கள் மற்றும் இமயமலையில் அமைந்துள்ள முசௌரி, சிம்லா போன்ற பகுதிகள், சமவெளிகளைவிட மிகவும் குளிராக உள்ளன.

**கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு :**

- இந்தியாவில் பெரும்பகுதி கடலிலிருந்து வெகுதொலைவில் இல்லை. இதன் காரணமாக இப்பகுதி முழுவதும் நிலவும் காலநிலை, கடல்சார் ஆதிக்கத்தைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் குளிர்காலம் குளிரற்றுக் காணப்பட்டு வருடம் முழுவதும் சீரான வெப்பநிலையைக் கொண்டுள்ளது.

**பருவகாலக் காற்று :**


- இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கியக் காரணி, பருவகாலக் காற்றாகும். இவை பருவங்களுக்கேற்ப மாறிமாறி வீசும் காற்றாகும்.
- தென் மேற்குப் பருவக்காற்று தொடக்கத்தின் காரணமாக வெப்பநிலை குறைந்து, இந்தியாவின் பல பகுதிகளுக்கு மிதமானதுமுதல் கனமழைவரை பொழிகிறது. இதேபோல் தென்கிழக்கு இந்தியாவின் காலநிலையும் வடகிழக்குப் பருவக்காற்றின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.

**ஜெட் காற்றோட்டங்கள் :**

- வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகளை “ஜெட் காற்றுகள்” என்கிறோம். கீழை ஜெட் காற்றோட்டங்கள் தென்மேற்கு மற்றும் பின்னடையும் பருவக்காற்றுக் காலங்களில் வெப்பமண்டலத் தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com


இந்தியா
மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்
ஆப்கானிஸ்தான்
பாகிஸ்தான்
சீனா
லடாக்
லே
ஸ்ரீநகர்
ஜம்மு காஷ்மீர்
ஜம்மு
இமாசலப் பிரதேசம்
சிம்லா
பஞ்சாப்
சண்டிகர்
டேராடூன்
உத்தரகாண்ட்
ஹரியானா
புது டெல்லி
நேபாளம்
ராஜஸ்தான்
ஜெய்பூர்
லக்னோ
உத்திரப் பிரதேசம்
சிக்கிம்
கேங்டாக்
பூடான்
அருணாச்சலப் பிரதேசம்
இட்டாநகர்
திஸ்பூர்
அஸ்ஸாம்
நாகாலாந்து
கோஹிமா
மேகாலயா
ஷில்லாங்
இம்பால்
மணிப்பூர்
பீகார்
பாட்னா
பங்களாதேஷ்
திரிபுரா
அகர்தலா
ஐஸ்வால்
மிசோரம்
டாக்கா
கடக ரேகை
குஜராத்
காந்திநகர்
மத்தியப் பிரதேசம்
போபால்
ஜார்க்கண்ட்
ராஞ்சி
மேற்கு வங்காளம்
கொல்கத்தா
சட்டீஸ்கர்
ராய்பூர்
மியான்மார்
டையூ டாமன்
தாத்ரா நகர்ஹவேலி
ஒடிஷா
புவனேஸ்வர்
மும்பை
மகாராஷ்டிரம்
தெலங்கானா
ஹைதராபாத்
அமராவதி
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
பனாஜி
கோவா
கர்நாடகம்
ஆந்திரப் பிரதேசம்
பெங்களூரு
சென்னை
புதுச்சேரி
(பாண்டிச்சேரி)
இலட்சத் தீவுகள் (இந்தியா)
கவரத்தி
தமிழ்நாடு
கேரளம்
திருவனந்தபுரம்
இலங்கை
அந்தமான் நிக்கோபார் தீவுகள் (இந்தியா)
போர்ட் ப்ளேர்
அந்தமான் கடல்
அளவையில் இல்லை
இந்தியப் பெருங்கடல்
வ
மே
கி
தெ

# குடிமையியல்

# அலகு - 1

# இந்திய அரசியலமைப்பு

### பாடச்சுருக்கம்

ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதைப் பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும். அது ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கான வாகனத்தின் அச்சாணி ஆகும். 1946ஆம் ஆண்டு அமைச்சரவை தூதுக்குழுவின் கீழ் அமைக்கப்பட்ட இந்திய அரசியல் நிர்ணய சபையால், இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்தியா ஓர் இறையாண்மை மிக்க, சமதர்ம, சமயச் சார்பற்ற ஜனநாயகக் குடியரசு என, நமது அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. குடிமகன் (Citizen) எனும் சொல் சிவிக்ஸ் (Civics) எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.

அரசியல் நிர்ணய சபை, பல்வேறு குழுக்களின்மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது. இந்திய அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழுத்தலைவர் டாக்டர் B.R. அம்பேத்கர் தலைமையின்கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே, அவர், 'இந்திய அரசியலமைப்பின் தந்தை' (Father of the Constitution of India) என அறியப்படுகிறார்.

அம்பேத்கர் கூற்றுப்படி அரசியலமைப்புப் பிரிவு 32, 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' (The Heart and Soul of the Whole Constitution) ஆகும். அமென்ட்மென்ட் (Amendment) எனும் சொல், மாற்றத்தைக் குறிக்கிறது. 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42ஆவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம், மாநிலப் பட்டியலிலிருந்து ஐந்து துறைகளைப் பொதுப் பட்டியலுக்கு மாற்றியது.

அவை : 1. கல்வி, 2. காடுகள், 3. எடைகள் மற்றும் அளவுகள், 4. பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, 5. உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர, பிற நீதி மன்றங்களுக்கான நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

### கற்றலின் நோக்கங்கள்

- இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டதை அறிதல்
- இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை அறிதல்
- அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிதல்
- அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளை அறிதல்
- மத்திய, மாநில அரசுகளின் உறவுகள் மற்றும் அவசரநிலை பற்றிப் புரிதல்

### பாடநூல் பயிற்சி வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு. (Sep.-22)

1. கீழ்காணும் வரிசையில், 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது?

அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை.
ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.
இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.
ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக குடியரசு.

**விடை : ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக குடியரசு.**

2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை, எத்தனை முறை திருத்தப்பட்டது?

அ) ஒருமுறை ஆ) இருமுறை
இ) மூன்றுமுறை ஈ) எப்பொழுதும் இல்லை.

**விடை : அ) ஒருமுறை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்தியக் குடியுரிமை பெறமுடியும்?

அ) வம்சாவளி ஆ) பதிவு

இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்

**விடை : இ) இயல்புரிமை**

4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி? (PTA-2)

அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை

இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

**விடை : இ) சொத்துரிமை**

5. கீழ்கண்டவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை. (PTA-6)

அ) கர்நாடகாவிலிருந்து கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்

ஆ) கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாகப் பள்ளிகளை அமைத்தல்.

இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்குச் சம ஊதியம் பெறுதல்

ஈ) பெற்றோர்களின் பூர்வீகச் சொத்துகள், அவர்களின் பிள்ளைகளுக்குச் செல்லுதல்.

**விடை : ஈ) பெற்றோர்களின் பூர்வீகச் சொத்துகள், அவர்களின் பிள்ளைகளுக்குச் செல்லுதல்.**

6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். B.R. அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என விவரிக்கப்பட்டது? (Sep.-20)

அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை

இ) அரசியலமைப்புக்குட்பட்டுத் தீர்வு காணும் உரிமை

ஈ) சொத்துரிமை

**விடை : இ) அரசியலமைப்புக்குட்பட்டுத் தீர்வு காணும் உரிமை**

7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?

அ) உச்சநீதி மன்றம் விரும்பினால் ஆ) பிரதமரின் ஆணையினால்

இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசுத் தலைவரின் ஆணையினால்.

ஈ) மேற்கண்ட அனைத்தும்

**விடை : இ) தேசிய அவசரநிலையின் போது குடியரசுத் தலைவரின் ஆணையினால்**

8. நமது அடிப்படைக் கடமைகளை ______ இடமிருந்து பெற்றோம்.

அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடிய அரசியலமைப்பு

இ) ரஷ்ய அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

**விடை : இ) ரஷ்ய அரசியலமைப்பு**

9. எந்தப் பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்? (May-22)

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356

இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

**விடை : இ) சட்டப்பிரிவு 360**

10. எந்தக் குழுக்கள் / கமிஷன்கள் நடுவண் – மாநில உறவுகள் பற்றிப் பரிந்துரை செய்தன?

1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M.N. வெங்கடாசலையா குழு

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.

அ) 1, 2 & 3 ஆ) 1 & 2 இ) 1 & 3 ஈ) 2 & 3

**விடை : ஆ) 1 & 2**

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ______இல் தோன்றியது.
   விடை : அமெரிக்க ஐக்கிய நாடுகள்
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிகத் தலைவராக ______ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
   விடை : Dr. சச்சிதானந்த சின்ஹா
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ______.
   விடை : நவம்பர் 26, 1949
4. பேராணைகள் சட்டப்பிரிவு 32இல் குறிப்பிடப்பட்டுள்ள நீதிபேராணைகளின் எண்ணிக்கை ______.
   விடை : ஐந்து
5. இந்தியக் குடிமக்களுக்கு அடிப்படைக் கடமைகள் ______ பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.
   விடை : 51A

## III. பொருத்துக. விடை:

| | | | |
|---|---|---|---|
| 1. | குடியுரிமைச் சட்டம் | ஜவகர்லால் நேரு | 1955 |
| 2. | முகவுரை | 42ஆவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் | ஜவகர்லால் நேரு |
| 3. | குறு அரசியலமைப்பு | 1955 | 42ஆவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் |
| 4. | செம்மொழி | 1962 | தமிழ் |
| 5. | தேசிய அவசர நிலை | தமிழ் | 1962 |

## IV. குறுகிய விடை தருக.

### 1. அரசியலமைப்பு என்றால் என்ன?

★ ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதைப் பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.

★ அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி போன்றது.

### 2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன? (PTA-5)

★ 'சிட்டிசன்' எனும் சொல், 'சிவிஸ்' எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப் பட்டதாகும்.

★ இதன் பொருள், ஒரு '**நகர அரசில் வசிப்பவர்**' என்பதாகும்.

★ ஒரு நாட்டில் வசிப்பதற்கான உரிமை குடியுரிமை எனப்படும்.

### 3. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளைப் பட்டியலிடுக. (PTA-3)

★ சமத்துவ உரிமை

★ சுதந்திர உரிமை

★ சுரண்டலுக்கெதிரான உரிமை

★ சமயச் சார்பு உரிமை

★ கல்வி, கலாச்சார உரிமை

★ அரசியலமைப்புக்குட்பட்டுத் தீர்வு காணும் உரிமை

### 4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?

★ நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் **கட்டளை** அல்லது **ஆணை நீதிப் பேராணை** எனப்படும். இது, சில சட்டங்களை நிறைவேற்றாமல் **தடைசெய்ய**, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

★ உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்கள் ஆகிய இரண்டுமே "ஐந்து வகையான நீதிப்பேராணைகளை" வெளியிட அதிகாரம் பெற்றுள்ளன.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

5. **நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.**

- சட்டமன்ற உறவுகள்
- நிர்வாக உறவுகள்
- நிதி உறவுகள்

6. **செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள் எவை?** (Sep.-22, April-23)

- தமிழ்
- சமஸ்கிருதம்
- தெலுங்கு
- கன்னடம்
- மலையாளம்
- ஒடியா.

7. **தேசிய அவசரநிலை என்றால் என்ன?** (PTA-6)

★ போர், அல்லது வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசரநிலை அறிவிக்கப்படும்பொழுது, அது **'வெளிப்புற அவசரநிலை'** எனப்படுகிறது.

★ ஆயுதமேந்திய கிளர்ச்சி காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும்பொழுது, அது **'உள்நாட்டு அவசரநிலை'** எனப்படுகிறது. தேசிய அவசரநிலை "அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 352ன்" கீழ் குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்படுகிறது.

## V. விரிவான விடை தருக.

1. **இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.** (PTA-1, Sep.-21,22, April-23)

★ உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளைவிடவும் மிகவும் நீளமானது. இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை. இது **நெகிழாத் தன்மை** கொண்டதாகவும், **நெகிழும் தன்மை** கொண்டதாகவும் உள்ளது.

★ கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது. இந்தியாவைச் **சமயச்சார்பற்ற** நாடாக்குகிறது. **சுதந்திரமான** நீதித்துறையை வழங்குகிறது.

★ உலகளாவிய வயது வந்தோர் **வாக்குரிமையை** அறிமுகப்படுத்தியதோடு, **18 வயது** நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த விதப் பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

2. **அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.** (Dept.)

★ தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளன. இந்தியாவில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் பொதுவானவை.

**சமத்துவ உரிமை :**

பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
பிரிவு 16 – பொது வேலைகளில் சமவாய்ப்பளித்தல்.
பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்.
பிரிவு 18 – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்றப் பட்டங்களை நீக்குதல்.

**சுதந்திர உரிமை :**

பிரிவு 21 – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்புப் பெறும் உரிமை.
பிரிவு 21 – தொடக்கக் கல்வி பெறும் உரிமை.
பிரிவு 22 – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

**சுரண்டலுக்கெதிரான உரிமை:**

பிரிவு 23 – கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.
பிரிவு 24 – தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

**சமயச் சார்பு உரிமை :**

பிரிவு 25 – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
பிரிவு 26 – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.
பிரிவு 27 – எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.
பிரிவு 28 – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமலிருக்க உரிமை.

www.Padasalai.Net

**கல்வி கலாச்சார உரிமை :**

பிரிவு 29 – சிறுபான்மையினரின் எழுத்து, மொழி மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.

பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

**அரசியலமைப்புக்குட்பட்டுத் தீர்வு காணும் உரிமை :**

பிரிவு 32 – தனிப்பட்டவரின், **அடிப்படை உரிமைகள்** பாதிக்கப்படும்போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

**3. அரசியலமைப்புக்குட்பட்டுத் தீர்வு காணும் உரிமையைப் பற்றி எழுதுக. (அல்லது) பேராணை அதிகாரங்கள் குறித்து எழுதுக.** (PTA-6)

**அரசியல் சட்ட மேல் முறையீட்டு உரிமைகள் (சட்டப்பிரிவு – 32) :**

★ நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப் பேராணை எனப்படும். இது, சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

★ உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் நீதிப்பேராணைகளை வெளியிடுகின்றன. இது போன்ற ஆணைகள் மூலம் மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் நீதிப்பேராணைகளை வெளியிடுகின்றன. இது போன்ற ஆணைகள் மூலம் மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் "அரசியலமைப்பின் பாதுகாவலன்" என அழைக்கப்படுகிறது.

★ Dr. B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்புச் **சட்டப்பிரிவு – 32**, இந்திய அரசியலமைப்பின் '**இதயம் மற்றும் ஆன்மா**' ஆகும்.

**ஆட்கொணர்வு நீதிப்பேராணை :**

★ சட்டத்திற்குப் புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.

**கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை :**

★ மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறைகளிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

**தடையுறுத்தும் நீதிப்பேராணை :**

★ ஒரு கீழ்நீதிமன்றம் தனது சட்ட எல்லையைத் தாண்டிச் செயல்படுவதைத் தடுக்கிறது.

**ஆவணக் கேட்புப் பேராணை :**

★ உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்குத் தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்யக் கீழ்நீதிமன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.

**தகுதி முறை வினவும் நீதிப்பேராணை :**

★ இப்பேராணை, சட்டத்திற்குப் புறம்பாக, தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதைத் தடை செய்கிறது.

**4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.** (May-22)

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| இவை, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை. | இவை, அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பி லிருந்து பெறப்பட்டவை. |
| அரசாங்கத்தால்கூட இந்த உரிமையைச் சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை, அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| இவற்றை நீதிமன்றச் சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது. |
| இவை, சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை, தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| இந்த உரிமைகள், நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன. | இந்தக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |

# PTA & Exam Questions (Interior)

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 14 வழங்குவது ______. (PTA-5)

அ) சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஆ) பாகுபடுத்துவதைத் தடை செய்தல்
இ) சம வாய்ப்பளித்தல் ஈ) பட்டங்களை நீக்குதல்

**விடை : அ) சட்டத்தின் முன் அனைவரும் சமம்**

## IV. குறுகிய விடை தருக.

**1. கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை – சிறுகுறிப்பு வரைக.** (PTA-1)

- இது கீழ் நீதிமன்றங்களுக்கு உயர்நீதிமன்றங்கள் இடும் ஆணை. தனது மனுத்தொடர்பான பணியினைச் சம்பந்தப்பட்ட மனுதாரர், சட்ட உதவியுடன் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

**2. ஏதேனும் இரண்டு அடிப்படை உரிமைகளை எழுதுக.** (PTA-3)

**சமத்துவ உரிமை :**

- பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
- பிரிவு 16 – வேலைவாய்ப்பில் சம உரிமை.

**சுரண்டலுக்கு எதிரான உரிமை :**

- பிரிவு 23 – கட்டாய வேலை, கொத்தடிமை ஒழிப்பு.
- பிரிவு 24 – குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

**3. உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை என்றால் என்ன ?** (PTA-6)

- மக்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் ‘வயது வந்தோர் வாக்குரிமை’ பின்பற்றப்படுகிறது.
- இந்தியாவில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவரும், எந்தவித பாகுபாடுமின்றி தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கத் தகுதியுடையவர் ஆவார். இதுவே உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை என்பதாகும்.

## V. விரிவான விடை தருக.

**1. இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகள் யாவை ?** (PTA-4)

- இந்தியக் குடிமகனின் கடமைகளை அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 51A வலியுறுத்துகிறது. ஒவ்வோர் இந்திய குடிமகனும் அரசியலமைப்பு, அதன் கொள்கைகள், தேசிய கீதம், தேசியக் கொடி, தேசியச் சின்னங்களை மதித்து நடக்க வேண்டும்.
- இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். தேசப் பாதுகாப்பிற்குத் தேவைப்படும்போது தேசப் பணியாற்ற வேண்டும். சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து சகோதரத்துவமாகப் பழக வேண்டும். தனிப்பட்ட அல்லது கூட்டுச் செயல்பாடுகள்மூலம் தேசத்தின் உயர்வு மற்றும் சாதனைக்காக உழைக்க வேண்டும்.
- நமது உயர்ந்த, பாரம்பரிய கலப்பு கலாச்சாரத்தை மதித்து பாதுகாக்க வேண்டும்.
- பெண்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். நமது உயர்ந்த, பாரம்பரியக் கலப்புக் கலாச்சாரத்தை மதிக்க வேண்டும். இயற்கைச் சூழலைப் பாதுகாக்க வேண்டும். வன்முறையைக் கைவிட்டுப் பொதுச்சொத்துகளைப் பாதுகாக்க வேண்டும். 6முதல் 14வயது வரையுள்ள குழந்தைகள், கல்வி பெற வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

www.Padasalai.Net

# அலகு - 2
# நடுவண் அரசு

### பாடச்சுருக்கம்

இந்திய நாட்டின் உயர்ந்த அரசாங்க அமைப்பு, நடுவண் அரசு ஆகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்பில் 52முதல் 78வரையிலான சட்டப்பிரிவுகள் (Articles), நடுவண் அரசின் நிர்வாகம் பற்றி விவரிக்கின்றன.

இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்கள், இந்தியாவின் பரந்த மற்றும் பன்முகத்தன்மையைக் கருத்தில் கொண்டு, இந்தியாவுக்குக் கூட்டாட்சி முறையிலான நிர்வாக அரசை வழங்கியுள்ளனர்.

நடுவண் அரசு மூன்று அங்கங்களைக் கொண்டது. அவை நிர்வாகம், சட்டமன்றம், நீதித்துறை ஆகியனவாகும். நடுவண் அரசு நிர்வாகம் என்பது, குடியரசுத் தலைவர், துணைக்குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவைக் குழு மற்றும் இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் ஆகியோரை உள்ளடக்கியதே ஆகும்.

நடுவண் சட்டமன்றமானது, நாடாளுமன்றம் என அழைக்கப்படுகிறது. இது இரண்டு அவைகளைக் கொண்டது. அவை மாநிலங்களவை (Rajya Sabha) மற்றும் மக்களவை (Lok Sabha) ஆகியவையாகும். நடுவண் நீதித்துறை உச்சநீதிமன்றத்தைக் கொண்டுள்ளது.

நடுவண் அரசின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார். பெயரளவில் நிர்வாக அதிகாரம் பெற்ற முதல் குடிமகன் ஆவார். அவர் முப்படைகளின் தளபதியாகச் செயல்படுகிறார். தற்போதைய குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு ஆவார்.

### கற்றலின் நோக்கங்கள்

- குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் அதிகாரங்களைப் பற்றி அறிதல்
- பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவை பற்றி அறிதல்
- மக்களவை மற்றும் மாநிலங்களவை பற்றி புரிந்துகொள்ளுதல்
- உச்ச நீதிமன்றம் பற்றி அறிதல்

### பாடநூல் பயிற்சி வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ______ ஆவார்.

   அ) குடியரசுத் தலைவர் ஆ) தலைமை நீதிபதி

   இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

   **விடை : அ) குடியரசுத் தலைவர்**

2. ஒரு மசோதாவை நிதிமசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்.

   அ) குடியரசுத் தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

   இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஈ) லோக்சபாவின் சபாநாயகர்

   **விடை : ஈ) லோக்சபாவின் சபாநாயகர்**

3. அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர். (PTA-1)

   அ) குடியரசுத் தலைவர் ஆ) மக்களவை

   இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை

   **விடை : ஆ) மக்களவை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


4. மக்களவை தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது ______.

அ) 18 வயது ஆ) 21 வயது இ) 25 வயது ஈ) 30 வயது

**விடை : இ) 25 வயது**

5. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு. (PTA-4)

அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்

இ) மாநில அரசாங்கம் ஈ) நாடாளுமன்றம்

**விடை : ஈ) நாடாளுமன்றம்**

6. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்? (April-23)

அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360 இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

**விடை : ஆ) சட்டப்பிரிவு 360**

7. உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர் ______.

அ) குடியரசுத் தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்

**விடை : அ) குடியரசுத் தலைவர்**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ______ மசோதாவை, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி, நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.

**விடை : நிதி**

2. ______ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.

**விடை : பிரதம அமைச்சர்,**

3. ______ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார். (PTA-6)

**விடை : துணைக் குடியரசுத் தலைவர்**

4. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் ______.

**விடை : இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்**

5. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது ______.

**விடை : 65** (Dept.)

6. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாவலன் ______ ஆகும்.

**விடை : உச்ச நீதிமன்றம்**

## III. சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

1. i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250.

ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்குக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.

iv) மாநிலங்களவை உறுப்பினர்கள், நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அ) ii & iv சரியானவை ஆ) iii & iv சரியானவை

இ) i & iv சரியானவை ஈ) i, ii & iii சரியானவை

**விடை : ஈ) i, ii & iii சரியானவை**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


2. i) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.
ii) நடுவண் அரசின் மூன்றாவது அங்கம் நீதிதுறை ஆகும்.
iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள், உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டவை.
iv) உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை, இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

அ) ii & iv சரியானவை ஆ) iii & iv சரியானவை
இ) i & iv சரியானவை ஈ) i & ii சரியானவை

**விடை : அ) ii & iv சரியானவை**

## IV. பொருத்துக. விடை:

| | | | |
|---|---|---|---|
| 1 | சட்டப்பிரிவு 53 | மாநில நெருக்கடிநிலை | குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள் |
| 2 | சட்டப்பிரிவு 63 | உள்நாட்டு நெருக்கடிநிலை | துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம் |
| 3 | சட்டப்பிரிவு 356 | குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள் | மாநில நெருக்கடிநிலை |
| 4 | சட்டப்பிரிவு 76 | துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம் | இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம் |
| 5 | சட்டப்பிரிவு 352 | இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம் | உள்நாட்டு நெருக்கடிநிலை |

## V. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளி.

**1. இந்தியக் குடியரசுத் தலைவர், எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?** (PTA-1, Sep.-20)

★ இந்தியக் குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தின்படி “வாக்காளர் குழுமத்தால்” தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

★ “வாக்காளர் குழுமம்” என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள். அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள். தேசிய தலைநகர் டெல்லி மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

**2. நடுவண் அரசின் அமைச்சர்கள் தரநிலைகளின்படி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்?**

நடுவண் அமைச்சர்கள், மூன்று தரநிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

- காபினெட் (அ) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
- இராசாங்க அமைச்சர்கள்
- இணை அமைச்சர்கள்

**3. நிதி மசோதா – குறிப்பு வரைக.** (Dept.)

★ நிதி மசோதா என்பது, மக்களவையில் அறிமுகப்படுத்தப்படும் மசோதாவாகும்.

★ இது, பொதுவாகப் பணம் பெறுதல், பணம் செலவழித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இம்மசோதா மாநிலங்களவையின் ஒப்புதலுடன் சட்டமாக மாறும்.

★ மாநிலங்களவை 14 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்கவில்லையெனில் ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும்.

**4. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.**

★ இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை இவருக்கு உண்டு

★ நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதற்கும், பங்கு கொள்வதற்கும் இவருக்கு உரிமை உண்டு.

**5. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?** (May-22)

★ இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

★ **பத்து ஆண்டுகள்** உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகச் செயலாற்றியிருத்தல் வேண்டும்.

★ **ஐந்து ஆண்டுகள்** உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.

★ குடியரசுத் தலைவர் பார்வையில், சிறப்பு மிக்க **சட்ட வல்லுநராய்** இருத்தல் வேண்டும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## VI. விரிவான விடையளி.

**1. இந்தியக் குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி. (Sep.-21)**

நடுவண் அரசின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவர் ஆவார்.

**சட்டமன்ற அதிகாரங்கள் :**

★ பொதுத்தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றித் தொடக்கி வைக்கிறார். மேலும், ஒவ்வோர் ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம், இவருடைய உரையுடன் துவங்குகிறது.

★ குடியரசுத் தலைவர், ஆண்டுக்கு இரண்டுமுறை நாடாளுமன்றத்தைக் கூட்டுகிறார். அவர் நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலும் ஒரு சட்ட மசோதா நிலுவையில் இருந்தாலும் அது குறித்துச் செய்தி அனுப்பலாம்.

★ குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே, அனைத்து மசோதாக்களும் சட்டமாகின்றன. நிதி மசோதாவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யமுடியாது.

★ நாடாளுமன்றத்தின் இரு அவைகளையோ ஏதேனும் ஓர் அவையின் கூட்டத்தையோ குடியரசுத் தலைவர் முடிவுக்குக் கொண்டுவரலாம். மக்களவையின் ஐந்து ஆண்டுக்காலம் முடியும் முன்னரே அதனைக் கலைக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.

**நீதி அதிகாரங்கள் :**

★ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 72ஆவது சட்டப்பிரிவு, நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், தண்டனையிலிருந்து விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

**2. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை? (PTA-2, May-22, April-23)**

★ அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 78, பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து, அவர்களுக்கு அரசின் **பல்வேறு துறைகளை** ஒதுக்கீடு செய்கிறார். தான் தலைமை வகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நாள், நிகழ்ச்சிநிரல் குறித்து முடிவு செய்வார்.

★ காபினெட் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறாத பொழுது, பிரதம அமைச்சர் தம் மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம். பிரதம அமைச்சர் **பல்வேறு துறைகளின்** பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

★ நடுவண் அரசின் விவகாரங்கள் மற்றும் **சட்டத்திற்கான** முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவை யின் அனைத்து முடிவுகளையும் **குடியரசுத் தலைவருடன்** விவாதிக்கிறார். பிரதம அமைச்சர் என்பவர், குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாகச் செயல்படுகிறார்.

★ பிரதம அமைச்சர், நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார். சர்வதேச மாநாடுகளான **காமன்வெல்த், அணிசேரா** நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில், இந்திய **நாட்டின் பிரதிநிதியாகப்** பிரதமர் பங்கு கொள்கிறார்.

**3. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளைத் திறனாய்வு செய்க.**

★ நடுவண் அரசின் "சட்டம் இயற்றும் அங்கமாக" நாடாளுமன்றம் திகழ்கிறது. இந்திய நாடாளுமன்றம் சட்டமியற்றுதல், நிர்வாகத்தினை மேற்பார்வையிடுதல், வரவு–செலவுத் திட்டத்தினை நிறைவேற்றுதல், **பொதுமக்கள் குறைகளைப் போக்குதல்**, மேலும் **வளர்ச்சித் திட்டங்கள்**, சர்வதேச உறவுகள், உள்நாட்டுக் கொள்கைகள் போன்றவற்றை விவாதித்தல் எனப் பல பணிகளைச் செய்கிறது.

★ நாடாளுமன்றம், குடியரசுத் தலைவர் மீதான **அரசியல் குற்றச்சாட்டுகளை** விசாரிக்கவும், உச்சநீதி மன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைமைத் தேர்தல் ஆணையர், இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ஆகியோரை அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளின்படி **பதவி நீக்கம்** செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. மாநிலங்களின் எல்லைகளை மாற்றி அமைத்திட, நாடாளுமன்றத்திற்கே அதிகாரம் உண்டு.

www.Padasalai.Net

**4. இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதிவரையறைகள் எவையேனும் மூன்றினை விளக்குக.** (PTA-5)

★ "இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன்" உச்சநீதிமன்றமாகும்.

**தனக்கேயுரிய நீதி வரையறை :**

★ உச்ச நீதிமன்றத்திற்கு **நேரடியாக வரும் வழக்குகள்**, தனக்கேயுரிய நீதி வரையறைக்குட்பட்டவை ஆகும். அவை,

★ இந்திய அரசிற்கும் ஒரு மாநிலம் அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்கள், **அடிப்படை உரிமைகளை** நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எழும் சிக்கல்கள் ஆகியன, உச்ச நீதிமன்றத்தின் வரையறைக்குட்பட்டதாகும். அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்திட, **நீதிப்பேராணைகளை** உச்சநீதி மன்றம் வழங்குகிறது.

**மேல்முறையீட்டு நீதிவரையறை :**

★ உச்ச நீதிமன்றமே நாட்டின் **இறுதி மேல்முறையீட்டு** நீதிமன்றமாகும்.

★ மாநில உயர் நீதிமன்றங்கள் உரிமையியல், குற்றவியல், அரசியலமைப்பு வழக்குகள் மீதான தீர்ப்புகளுக்கு எதிரான **மேல்முறையீட்டு** வழக்குகளை உச்சநீதிமன்றம் விசாரிக்கின்றது.

**ஆலோசனை நீதிவரையறை :**

★ பொது முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு சட்டம் அல்லது உண்மை மீதான உச்ச நீதிமன்றத்தின் கருத்தினைப் பெற அரசியலமைப்புச் சட்டம் **குடியரசுத் தலைவருக்கு** அதிகாரத்தினை வழங்குகிறது.

## PTA & Exam Questions (Interior)

### I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. நாடாளுமன்ற மேலவைக்குத் தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை ? (PTA-3)

அ) 16 ஆ) 17 இ) 18 ஈ) 19

**விடை : இ) 18**

### V. கீழ்க்கண்ட வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளி.

**1. மக்களவையின் சபாநாயகர் பற்றிக் குறிப்பு வரைக.** (PTA-3)

➤ மக்களவையைத் தலைமை ஏற்று நடத்துபவர் சபாநாயகர் ஆவார்.

➤ இவர், மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

➤ மக்களவை கலைக்கப்பட்டாலும், புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கும்வரை பதவியில் நீடிப்பார்.

➤ நாடாளுமன்ற இரு அவைகள் கூட்டும் கூட்டத்திற்கு இவர் தலைமை வகிப்பார்.

**2. மேல்முறையீட்டு நீதிவரையறை என்றால் என்ன ?** (PTA-4)

➤ உச்சநீதிமன்றமே நாட்டின் இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். உயர்நீதிமன்றங்கள் தங்களிடம் வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல்முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல் – குற்றவியல்) விசாரிக்கிறது.

**3. உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை என்றால் என்ன?** (PTA - 6)

➤ வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்ட "**18 வயது**" நிரம்பிய இந்திய குடிமக்கள் அனைவரும் எந்தவித வேறுபாடுகளும் இன்றி தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க தகுதியுடையவர் ஆவர் என்பதே உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை எனப்படுகிறது.

➤ இந்தியாவில் "**மக்களவை**" மற்றும் "**சட்டமன்ற**" உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை" பின்பற்றப்படுகிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பொருளியல்

## அலகு - 1

# மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம்

### பாடச்சுருக்கம்

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்துப் பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை, மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) என்கிறோம். நாட்டு வருமானம் என்பது ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். பொதுவாக நாட்டு வருமானம் மொத்த நாட்டு உற்பத்தி (Gross National Products) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

இந்தியப் பொருளாதாரத்தை மூன்று துறைகளாக வகைப்படுத்தலாம். அவை வேளாண்துறை, தொழில்துறை மற்றும் பணிகள் துறை ஆகும். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் சம்பாதித்த (அ) சம்பாதிக்காத பணம் (அ) பிற வருவாய்களை வருமானம் என அழைக்கிறோம். ஒரு பொருளாதாரத்தின் தொழில் (அ) சேவைத்துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் (அ) பணிகளின் மதிப்பாகும்.

அதிகப் பயன்பாட்டின் காரணமாகப் பொருள்கள் தேய்மானம் அடைதல் (அ) பழமையாதல் போன்றவற்றால் சொத்தின் மதிப்பு குறைவதைத் 'தேய்மானம்' என அழைக்கிறோம்.

இந்தியாவின் பொருளாதாரச் சீர்திருத்தம் பொதுவாக (Liberalization Privatisation and Globalisation) அதாவது தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என அழைக்கப்படுகிறது. இத்தகு பொருளாதாரச் சீர்திருத்தங்கள், நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.

### கற்றலின் நோக்கங்கள்

- மொத்த உள்நாட்டு உற்பத்தியை பற்றி தெரிந்து கொள்ளுதல்
- நாட்டு வருமானத்தின் பல்வேறு நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அமைப்பை புரிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல்வேறு துறைகளின் பங்களிப்பை தெரிந்துகொள்ளுதல்
- பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் அதன் வேறுபாடுகள் பற்றி அறிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு அடிப்படையில் வளர்ச்சிப் பாதைப் பற்றி தெரிந்துகொள்ளுதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார கொள்கைகளின் வளர்ச்சிப் பற்றி புரிந்து கொள்ளுதல்

### பாடநூல் பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. GNPயின் சமம் ______.

அ) பணவீக்கத்திற்காகச் சரிசெய்யப்பட்ட NNP

ஆ) பணவீக்கத்திற்காகச் சரிசெய்யப்பட்ட GDP

இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

**விடை : இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. நாட்டு வருமானம் அளவிடுவது ______.

அ) பணத்தின் மொத்த மதிப்பு
ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
இ) நுகர்வுப் பண்டத்தின் மொத்த மதிப்பு
ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

விடை : ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

3. முதன்மைத் துறை இதனை உள்ளடக்கியது ______. (Sep.-22)

அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

விடை : அ) வேளாண்மை

4. ______ முறையில் ஒவ்வொரு இடைநிலைப் பண்டத்தின் மதிப்பைக் கூட்டும்போது, இறுதிப் பண்டத்தின் மதிப்பைக் கணக்கிடலாம்.

அ) செலவு முறை
ஆ) மதிப்புக் கூட்டு முறை
இ) வருமான முறை
ஈ) நாட்டு வருமானம்

விடை : ஆ) மதிப்புக் கூட்டு முறை

5. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்புக் கூடுதல் 2018–19 இல் ______ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

அ) 91.06 ஆ) 92.26 இ) 80.07 ஈ) 98.29

விடை : ஆ) 92.26

6. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா, ______ அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.

அ) 1 வது ஆ) 3 வது இ) 4 வது ஈ) 2 வது

விடை : ஈ) 2 ஆவது

7. இந்தியாவில் சராசரி ஆயுட்காலம், ______ ஆண்டுகள் ஆகும்.

அ) 65 ஆ) 60 இ) 70 ஈ) 55

விடை : அ) 65

8. கீழ்க்கண்டவற்றுள் எது, வர்த்தகக் கொள்கை?

அ) நீர்ப்பாசனக் கொள்கை
ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொள்கை
இ) நிலச் சீர்திருத்தக் கொள்கை
ஈ) கூலிக் கொள்கை

விடை : ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொள்கை

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவில் ______ துறை, முதன்மைத் துறையாகும்.

விடை : வேளாண்மை

2. ______ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

விடை : தலா வருமானம்

3. இரண்டாம் துறையை, வேறுவிதமாக ______ துறை எனவும் அழைக்கலாம். (Sep.-22)

விடை : தொழில்

## III. பொருத்துக. விடை:

| | | | |
|---|---|---|---|
| 1. | மின்சாரம்/எரிவாயு மற்றும் நீர் | நாட்டு வருமானம்/மக்கள்தொகை | தொழில் துறை |
| 2. | விலைக்கொள்கை | மொத்த உள்நாட்டு உற்பத்தி | வேளாண்மை |
| 3. | GST | தொழில் துறை | பண்டம் மற்றும் பணிகள் மீதானவரி |
| 4. | தலா வருமானம் | வேளாண்மை | நாட்டு வருமானம் |
| 5. | C+I+G+(X-M) | பண்டம் மற்றும் பணிகள் மீதானவரி | மொத்த உள்நாட்டு உற்பத்தி |

www.Padasalai.Net

## IV. கீழ்க்கண்ட வினாக்களுக்குக் குறுகிய விடையளி.

**1. நாட்டு வருமானம் – வரையறு.**

★ நாட்டு வருமானம் என்பது, ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட **பண்டங்கள்** மற்றும் **பணிகளின்** மொத்த மதிப்பாகும். பொதுவாக நாட்டு வருமானம் மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?** (PTA-6, April-23)

★ ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள்+பணிகள்)களின் மொத்த மதிப்பே, மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். (GDP)

**3. GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக.** (May-22)

**GDP (மொத்த உள்நாட்டு உற்பத்தியின்) முக்கியத்துவம்:**

★ பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது.
★ உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்குப் பயன்படுகிறது.
★ வாங்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
★ பொதுத்துறை பற்றி அனைவரும் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றது.
★ பொருளாதாரத் திட்டமிட வழிக்காட்டியாகவும் பயன்படுகிறது.

**4. தனிநபர் வருமானம் என்றால் என்ன?** (PTA-5, Dept.)

★ தனிநபர் வருமானம் என்பது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

★ நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம், தலா வருமானம் பெறப்படுகிறது.

★ $\text{தனி நபர் வருமானம்} = \dfrac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

**5. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.**

★ மதிப்புக் கூட்டு முறையில் ஒவ்வொரு **இடைநிலைப்** பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால், இறுதிப்பண்டத்தின் **சந்தை மதிப்பை** அளவிடலாம். உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பைச் சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட **இறுதிப் பண்டங்களின்** மொத்த மதிப்புக் கிடைக்கிறது.

**மதிப்புக் கூட்டு முறை:**

★ டீத்துாள் + பால் + சர்க்கரை (இடைநிலைப் பண்டங்கள்) = தேனீர் (இறுதிப்பண்டம்)
★ இடைநிலைப் பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு.

**6. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.**

- வேளாண் கொள்கை
- தொழில்துறைக் கொள்கை
- புதிய பொருளாதாரக் கொள்கை
- வணிகக் கொள்கை
- ஊதியக் கொள்கை
- மக்கள்தொகைக் கொள்கை.

**7. சிறு குறிப்பு வரைக.**

**1) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH) 2) மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)**

**மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH)**

★ ஐக்கிய நாடுகள் சபை "வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு – மகிழ்ச்சி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

**GNHயின் 4 தூண்கள்:**

- நிலையான மற்றும் சமமான சமூகப் பொருளாதார வளர்ச்சி
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- கலாச்சாரத்தைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும்
- நல்ல ஆட்சித் திறன்

www.Padasalai.Net www.CBSEtips.in


**மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)**

★ மனித வள மேம்பாட்டுக் குறியீடு (HDI) என்பது 1990ஆம் ஆண்டு பாகிஸ்தானின் முகஹப் – உல் ஹக் என்ற பொருளியல் அறிஞரால் ஏற்படுத்தப்பட்டது.

★ பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத் தரம், GDPயின் மடக்கைச் செயல்பாடு எனக் கணக்கிடப்பட்டு வாங்கும் சக்தி சமநிலைக்குச் (PPP) சரி செய்யப்படுகிறது.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.

**1. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்குத் தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.**

**மொத்த நாட்டு உற்பத்தி (GNP) :** (PTA-1, Sep.-21)

★ மொத்த நாட்டு உற்பத்தி என்பது, அந்த **நாட்டு மக்களால்** ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும்.

★ **வெளிநாட்டு** முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

GNP = C + I + G + (X-M) +NFIA

C – நுகர்வோர்

I – முதலீட்டாளர்

G – அரசு செலவுகள்

X-M – ஏற்றுமதி – இறக்குமதி

NFIA – வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) :**

★ ஓர் ஆண்டில் **நாட்டின்** புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்)களின் **மொத்த மதிப்பே**, மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

**நிகர நாட்டு உற்பத்தி (NNP) :**

★ மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதனத் தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.

★ நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

**நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) :**

★ நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது, **மொத்த உள்நாட்டு** உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து **தேய்மானத்தைக்** (தேய்மானச் செலவின் அளவு) கழித்துப் பின் கிடைப்பது, **நிகர உள்நாட்டு** உற்பத்தியாகும்.

★ நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

**தலா வருமானம் அல்லது தனிநபர் வருமானம் (PCI) :**

★ தலா வருமானம் என்பது, மக்களின் **வாழ்க்கைத் தரத்தை** உணர்த்தும் ஒரு **கருவியாகும்.**

★ நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம், தலா வருமானம் பெறப்படுகிறது.

★ $\text{தலா வருமானம்} = \dfrac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

**தனிப்பட்ட வருமானம் (PI) :**

★ நேர்முக வரிவிதிப்பிற்கு முன் **தனிநபர்கள்** மற்றும் ஒரு நாட்டின் **குடும்பங்களின்** மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தைத் தனிப்பட்ட வருமானம் எனலாம்.

**செலவிடத் தகுதியான வருமானம் (DI) :**

★ தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் **நுகர்வுக்கு** செலவிடப்படுகின்ற வருமானத்தைச் செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது. இதனை இவ்வாறு அழைக்கலாம்.

DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முகவரி

(நுகர்வு முறையில் DI = நுகர்வுச் செலவு + சேமிப்பு)

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

2. **GDPஐக் கணக்கிடும் முறைகள் யாவை? அவற்றை விவரி.** (PTA-4, Dept., Sep.-22)

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணக்கீட்டு முறைகள்:**

**செலவின முறை:**

★ இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து **இறுதிப்பண்டப் பணிகளுக்கு** மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையேயாகும்.

Y = C + I + G + (X-M)

**வருமான முறை:**

★ பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தைக் கணக்கிட்டு மொத்த **உள்நாட்டு உற்பத்தியை** இந்த முறை கூறுகிறது. வருமான முறையில் GDPஐக் கணக்கிடும்போது,

**வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்.**

**மதிப்புக் கூட்டு முறை:**

★ "இறுதிப்பண்டம்" என்பது, ஹோட்டலில் ஒரு கோப்பைத் தேனீர் (Tea) நமக்கு வழங்கப்படுவதாகும். அதைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் **டீத்தூள், பால்** மற்றும் **சர்க்கரை, "இடைநிலை பண்டங்கள்"** ஆகும். ஒரு கோப்பைத் **தேனீர் இறுதிப் பண்டமாக** மாறுவதற்கு இவை ஒரு பகுதியாக அமைகின்றன.

★ ஒரு கோப்பைத் தேனீர் தயாரிக்கப் பயன்படுத்திய ஒவ்வோர் இடைநிலைப் பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால், **தேனீரின் சந்தை மதிப்பை** அளவிடலாம்.

★ உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பைச் சேர்க்கும்பொழுது, **பொருளாதாரத்தில்** உற்பத்தி செய்யப்பட்ட **இறுதிப் பண்டங்களின்** மொத்த மதிப்புக் கிடைக்கிறது.

**மதிப்புக் கூட்டு முறை:**

★ டீத்தூள் + பால் + சர்க்கரை (இடைநிலைப் பண்டங்கள்) = தேனீர் (இறுதிப்பண்டம்)

★ இடைநிலைப் பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு.

3. **பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக.**

| | ஒப்பீடு | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|---|
| i | கருத்து | பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து. | பொருளாதார முன்னேற்றம் ஒரு "பரந்த கருத்து". |
| ii | நோக்கம் | GDP, GNP, FDI, FII போன்ற அளவுகள் அதிகரிக்கும். | சராசரி ஆயுட்காலம், குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் குழந்தை இறப்பு விகிதம் குறைதல் ஆகியவற்றில் முன்னேற்றம். |
| iii | கால வரம்பு | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது. |
| iv | அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல். | உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல் அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை. |
| v | அரசாங்க உதவி | இது ஒரு தன்னிச்சையான செயல்முறையாகும். எனவே, அரசாங்க உதவி/ஆதரவு அல்லது தலையீடு தேவைப் படாது. | அரசாங்கத்தைச் சார்ந்துள்ளது. இது பரந்த கொள்கை மாற்றங்களை உள்ளடக்கியுள்ளது. |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


4. **கீழ்க்காணும் பொருளாதாரக் கொள்கைகளை விவரி.**

1. வேளாண் கொள்கை 2. தொழிற்கொள்கை 3. புதிய பொருளாதாரக் கொள்கை

**வேளாண் கொள்கை:**

★ உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை, **இறக்குமதிப் பொருள்கள்** பற்றிய அரசின் முடிவுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும்.

★ சில பரவலான கருப்பொருள்கள், இடர் மேலாண்மை மற்றும் சரிசெய்தல், பொருளாதார நிலைத் தன்மை, இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் நிலைத் தன்மையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்நாட்டுப் பொருள்களுக்கான **சந்தை அணுகல்** ஆகியவை, வேளாண் கொள்கையில் அடங்கும்.

**எ – கா :** விலைக்கொள்கை, நிலச் சீர்திருத்தக் கொள்கை, பசுமைப் புரட்சி, பாசனக் கொள்கை, உணவுக் கொள்கை, விவசாயத் தொழிலாளர் கொள்கை, கூட்டுறவுக் கொள்கை.

**தொழில்துறைக் கொள்கை:**

★ தொழில்துறை முன்னேற்றம், எந்த ஒரு பொருளாதாரத்திற்கும் முக்கியமான அம்சமாகும். இது, வேலை வாய்ப்பை உருவாக்குகிறது. **ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை** ஊக்குவிக்கிறது.

★ இதனால் நவீனமயமாக்கலுக்கு வழிவகுக்கப்பட்டு, இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது. உண்மையில், தொழில் துறை வளர்ச்சி, விவசாயத்துறை மற்றும் பணிகள் துறை போன்ற துறைகளை ஊக்குவிக்கின்றன.

★ இது பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகிக்கிறது. 1948லிருந்து பல தொழில் துறைக் கொள்கைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத்தப்பட்டது.

**எ – கா :** ஐவுளித்தொழில் கொள்கை, சர்க்கரைத் தொழில் கொள்கை, தொழில்துறை வளர்ச்சி விலைக் கொள்கை, சிறுதொழில் தொழிற்கொள்கை, தொழில்துறைத் தொழிலாளர் கொள்கை

**புதிய பொருளாதாரக் கொள்கை :**

★ 1990களின் ஆரம்பத்தில் இந்தியாவின் பொருளாதாரம் கணிசமான கொள்கை மாற்றங்களுக்கு உட்பட்டது. இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தம், LPG அல்லது **தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல்** மற்றும் **உலகமயமாக்கல்** என அழைக்கப்படுகிறது.

★ இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள், **நாட்டின் ஒட்டு மொத்தப்** பொருளாதார வளர்ச்சியை ஒரு குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.

## PTA & Exam Questions (Interior)

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது _______. **(PTA-2)**

அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்

ஆ) மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்

இ) தனிப்பட்ட வருமானம் – நேர்முகவரி ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

**விடை : ஆ) மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்**

2. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான தவறான கூற்றைக் கண்டறியவும். **(Sep.-21)**

அ) பொருளாதார வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது

ஆ) பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.

இ) பொருட்களின் தரத்தை அளவிடப் பயன்படுகிறது.

ஈ) வாங்கும் திறனை மதிப்பீடு செய்ய உதவுகிறது.

**விடை : இ) பொருட்களின் தரத்தை அளவிடப் பயன்படுகிறது.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. பின்வரும் காரணங்களினால் இந்தியாவின் சேமிப்பு விகிதம் குறைவாக உள்ளது. (PTA-6)

i) குறைந்த தனிநபர் வருமானம்.
ii) மோசமான செயல்திறன் மற்றும் பொதுத்துறையின் குறைவான பங்களிப்பு
iii) வீடுகள் துறையின் மோசமான பங்களிப்பு.
iv) கிராமப்புறத் துறையின் சேமிப்புத் திறனை முழுமையாகப் பயன்படுத்தாதது.

அ) i, ii மற்றும் iv சரியானவை ஆ) i, ii மற்றும் iii சரியானவை
இ) i, ii, iii மற்றும் iv சரியானவை ஈ) i, iii மற்றும் iv சரியானவை

**விடை : அ) i, ii மற்றும் iv சரியானவை**

4. GDP யில் எந்தத் துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது? (PTA-5)

அ) வேளாண் துறை ஆ) தொழில் துறை
இ) பணிகள் துறை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**விடை : இ) பணிகள் துறை**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி இயந்திரம் ______ துறையாகும். (PTA-6)

**விடை : பணிகள்**

## IV. கீழ்க்கண்ட வினாக்களுக்குக் குறுகிய விடையளி.

**1. இரண்டாம் துறை – குறிப்பு எழுதுக.** (PTA-2)

- தொழில்துறையே இரண்டாம் துறையாகும். மூலப்பொருள்களை மாற்றியமைப்பதன் மூலம், பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

  **எ – கா :** இரும்பு எஃகுத் தொழில், ஜவுளித் தொழில், காகிதம் – சர்க்கரை ஆலை.

**2. இந்தியப் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் யாவை ?** (PTA-5)

- இந்தியாவில் 35 வயதிற்கு உட்பட்ட உழைக்கும் வயதில் 700 மில்லியன் பேர் உள்ளனர். உழைக்கும் வயது மக்களின் பங்கு 58% லிருந்து 64%ஆக உயர்ந்துள்ளது.
- தொழில் நுட்ப மேம்பாடு, தொழிலாளர் சீர்திருத்தம், வாழ்க்கைத் தரத்தை அதிகப்படுத்துவது, பொருளாதார அமைப்புகளில் மாற்றம் போன்றவற்றில் வெற்றியை உருவாக்கியுள்ளனர்.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.

**1. இந்தியாவில் GDPயில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.** (PTA - 2)

இந்தியப் பொருளாதாரம் பரவலாக மூன்று துறைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை,

**முதன்மைத் துறை – வேளாண் துறை :**

★ வேளாண்மைத்துறையை முதன்மைத்துறை எனவும் அழைக்கலாம். இதில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் அடங்கும்.

**எ – கா :** கால்நடைப் பண்ணைகள், மீன் பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், நிலக்கரி போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி செய்தல்.

**இரண்டாம் துறை – தொழில்துறை :**

★ மூலப்பொருட்களை மாற்றியமைப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

**எ – கா :** இரும்பு மற்றும் எஃகு தொழில், ஜவுளித்தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோமொபைல்ஸ் மற்றும் பிற சிறுதொழில்கள் ஆகும்.

**மூன்றாம் துறை – பணிகள் துறை :**

★ அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்றவைகளாகும். 20ஆம் நூற்றாண்டில் பொருளாதார நிபுணர்கள் பாரம்பரிய மூன்றாம் நிலை பணிகளை நான்கு மற்றும் ஐந்தாம் நிலைப் பணிகள் துறைகளிலிருந்து மேலும் வேறுபடுத்திட முடியும் என்றனர்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# அலகு - 2
# உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்

### பாடச்சுருக்கம்

நவீன நாட்களில் அரசியல்வாதிகள், பொருளியல் வல்லுநர்கள் மற்றும் தொழிலதிபர்களிடையே அதிகமாகப் பேசக்கூடிய கருத்துகளாகத் தாராளமயமாக்கல் (LPG) இருக்கின்றன. இந்தியாவில் 1980 – 81க்குப் பிறகு 1990 – 91 காலத்தில் நடைபெற்ற வளைகுடாப் போர்களால் எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் மேற்கு ஆசியாவின் போர்க்குணம் ஆகியவற்றின் காரணத்தால், கடுமையான அயல்நாட்டு வாணிகச் செலுத்து சமநிலையில் ஏற்பட்ட சிக்கல்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய அரசு 1991இல் பொறுப்பேற்றவுடன் இந்தியா அயல்நாட்டு வாணிகச் செலுத்து, சமநிலையில் முன் எப்போதும் இல்லாத நெருக்கடியைச் சந்தித்தது. சில சர்வதேச நிறுவனங்களால் இந்தியாவின் கடன் மதிப்பீடு குறைந்ததுடன், இங்கிருந்து கணிசமான மூலதனமும் வெளியே சென்றது.

சர்வதேசச் சந்தையில் இந்தியா தனது கடன்தரும் தகுதியை இழந்ததால், இங்கிலாந்து வங்கியில் 40 டன் தங்கத்தை அடமானம் வைத்தது. இந்தச் சூழ்நிலையில் ஜூலை 1991இல் அரசாங்கம் தனது வரவுசெலவுத் திட்டத்தைத் தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) ஆகியவற்றின் தொடர்ச்சியான கொள்கை மாற்றங்களுடன் வழங்கியது.

இது இந்தியாவின் புதிய பொருளாதாரக் கொள்கை என அழைக்கப்பட்டது. 80களில் பல்வேறு சீர்திருத்தங்கள் பின்பற்றப்பட்டுச் சர்வதேசத் தாராளமயமாக்கலின் அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது வெளிநாட்டு வணிகத் தொடர்புகளுக்குக் கணிசமான உத்வேகத்தை அளித்தது.

1991இல் அறிவிக்கப்பட்ட தாராளமயமாக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையினால் (Foreign Investment Policy) வெளிநாட்டு ஒத்துழைப்புகள், அதிகரித்து, வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FIP) அதிகரித்துள்ளன. 1947இல், General Agreement on Tariffs and Trade நிறுவன உறுப்பினர்களுள் இந்தியாவும் ஒன்றாக இருந்தது.

### கற்றலின் நோக்கங்கள்

- ✍ உலகமயமாதலின் பொருள் மற்றும் வரலாறு பற்றி அறிந்துகொள்ளுதல்
- ✍ பன்னாட்டு நிறுவனங்களின் (விழிசி) பரிமாண வளர்ச்சியை புரிந்துகொள்ளுதல்
- ✍ தென்னிந்திய வரலாற்று முன்னோக்கில், வர்த்தகம் மற்றும் வணிகர்கள் பற்றி அறிந்துகொள்ளுதல்
- ✍ நியாயமான வர்த்தக நடைமுறைகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பைப் பற்றி அறிந்துகொள்ளுதல்
- ✍ உலகமயமாதலின் தாக்கத்தையும், சவால்களையும் புரிந்துகொள்ளுதல்

### பாடநூல் பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்? **(PTA-1)**

   அ) அமைச்சரவை ஆ) தலைமை இயக்குநர்
   
   இ) துணைத் தலைமை இயக்குநர் ஈ) இவற்றில் எதுவுமில்லை

   **விடை : ஆ) தலைமை இயக்குநர்**

2. இந்தியாவில் காலனியாதிக்க வருகை ______. **(PTA-3)**

   அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு.
   
   ஆ) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு.
   
   இ) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்.
   
   ஈ) டேனிஷ், போர்ச்சுகீசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு.

   **விடை : அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர்கள், டேனிஷ், பிரெஞ்சு.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. காட்(GATT)–இன் முதல் சுற்று நடைபெற்ற இடம் ______.

அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா

விடை : ஈ) ஜெனீவா

4. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?

அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

விடை : ஈ) 1994

5. 1632இல் ஆங்கிலேயர்களுக்குக் "கோல்டன் ஃபயர்மேன்" என்ற பட்டத்தை வழங்கியவர் யார்?

அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான்

இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்

விடை : ஆ) கோல்கொண்டா சுல்தான்

6. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு ______.

அ) ஜூன் 1991 ஆ) ஜூலை 1991

இ) ஜூலை – ஆகஸ்ட் 1991 ஈ) ஆகஸ்ட் 1991

விடை : இ) ஜூலை – ஆகஸ்ட் 1991

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒரு நல்ல பொருளாதாரம், ______ ன் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

விடை : மூலதனச் சந்தையின் **(Sep.-20)**

2. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம், ______ ஆம் ஆண்டு அமலுக்கு வந்தது.

விடை : ஜனவரி 01, 1995

3. ______ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது. **(PTA-3,5, Dept.)**

விடை : பேராசிரியர் தியோடோர் லெவிட்

## III. பொருத்துக.

| | | | விடை: |
|---|---|---|---|
| 1. | இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் | 1947 | இன்ஃபோசிஸ் |
| 2. | பன்னாட்டு நிதி நிறுவனம்(MNC) | அயல்நாட்டு வாணிபத்தைச் செயல்படுத்தல் | உற்பத்திச் செலவைக் குறைத்தல் |
| 3. | GATT ஒப்பந்தம் | உற்பத்திச் செலவு குறைத்தல் | 1947 |
| 4. | உலக வர்த்தக அமைப்பு (WTO) | ஈ) இன்ஃபோசிஸ் | அயல்நாட்டு வாணிபத்தைச் செயல்படுத்தல் |

## IV. கீழ்கண்ட வினாக்களுக்குக் குறுகிய விடையளி.

### 1. உலகமயமாக்கல் என்றால் என்ன?

★ உலகமயமாக்கல் என்பது, உலகப் பொருளாதாரத்துவ நாடுகளை ஒருங்கிணைப்பதாகும். அடிப்படையில் உலகமயமாக்கல், **சர்வதேசமயமாக்கல்** மற்றும் **தாராளமயமாக்கல்** செயல்முறையைக் குறிக்கிறது.

### 2. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக. (PTA-1, 4)

- தொன்மையான உலகமயமாக்கல்
- இடைப்பட்ட உலகமயமாக்கல்
- நவீன உலகமயமாக்கல்

### 3. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

★ பன்னாட்டு நிறுவனம் என்பது, நாட்டில் **பண்டங்களையும்** அல்லது **பணிகளையும்** உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெருநிறுவனமாகும்.

★ ஐ. பி. எம்., டாடா குழுமம் மைக்ரோ சாப்ட் கார்ப்பரேசன், நெட்டில் போன்றவை இந்தியாவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் ஆகும்.

★ பாரத் ஏர்டெல், டி. வி. எஸ் (TVS), பஜாஜ் போன்றவை வெளிநாட்டிலுள்ள இந்தியாவின் சில பன்னாட்டு நிறுவனங்களாகும்.

www.Padasalai.Net

**4. உலகமயமாக்கலை சார்ந்த சீர்திருத்தங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.**

★ சில தொழிற்சாலைகளைத் தவிர, **தொழில் உரிமம்** பெறுவதை நீக்கியது. பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

★ அயல்நாட்டுச் செலாவணி ஒழுங்குமுறை, பொருத்தமாக திருத்தப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான **நீர்மை விகிதம்** (SLR) அதிகரிக்கப்பட்டது.

**5. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?**

★ நியாயமான வர்த்தகமானது, **சிறிய விவசாயிகளை உலகளாவிய சந்தை** இடத்தில் ஒரு சுறுசுறுப்பான பகுதியாக வைத்திருப்பதோடு, **நுகர்வோருக்கு அதிகாரம்** அளிக்கவும், கொள்முதல் செய்யவும், அவர்களின் **மதிப்பை** ஆதரிக்கவும் நோக்கமாகக் கொள்ளும் ஒரு வழி முறையாகும்.

**6. “நியாயமான வர்த்தக நடைமுறைகளின்” ஏதாவது இரு கோட்பாடுகளை எழுதுக.**

★ வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு.

★ நியாயமான வர்த்தக / நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.

★ குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது,

**7. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.**

★ ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதனச் சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது. வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது.

★ புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகமயமாக்கல், ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.

**1. பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளைச் சுருக்கமாக எழுதுக.**

**MNCயின் நன்மைகள் :** (PTA-6)

★ பன்னாட்டு நிறுவனங்கள், குறைந்த விலையில் பொருள்களைத் தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.

★ விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.

★ வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

★ உள்ளூர்ப் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கிறது.

**பன்னாட்டு நிறுவனங்களின் தீமைகள் :**

★ முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.

★ சுற்றுச்சூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.

★ ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம், சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

★ ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீகச் சட்டங்களை குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிகச் செயல்பாட்டினைத் திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.

**2. உலக வர்த்தக அமைப்பு பற்றி எழுதுக.**

**உலக வர்த்தக அமைப்பு (World Trade Organisation) :**

★ 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை (WTO) அமைப்பதற்குக் காட் உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் போது இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

★ இந்த ஒப்பந்தத்தை அமல்படுத்திட 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது.

★ WTO உடன் படிக்கை, ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது.

**தலைமையகம் :** ஜெனிவா, சுவிட்சர்லாந்து

**நோக்கம் :** வணிகத்தினைக் கட்டுப்படுத்தல், அயல்நாட்டு வாணிகம்

**உறுப்பினர்கள் :** தலைமை இயக்குநர், துணைத் தலைமை இயக்குநர் – 4 மற்றும் 80 உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 600 அலுவலக ஊழியர்கள்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


**உலக வர்த்தக அமைப்பின் குறிக்கோள்கள் :**

★ அயல் நாட்டு வாணிகத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்,
★ வர்த்தகத் தாராளமயமாக்கல் பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பு மன்றத்தை வழங்குதல்,
★ வர்த்தகத் தகராறுகளைக் கையாளுதல்,
★ நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்,
★ உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்குப் பாதுகாப்பாக இருத்தல்,
★ முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்,
★ முழு வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்.

**3. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.** **(PTA-2, Sep.-20)**

**உலகமயமாக்கலின் சவால்கள் :**

★ உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாகக் கிடைப்பதில்லை.
★ வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், **உறுதியற்ற தன்மைக்கு** வழிவகுக்கும் என்பது அச்சத்திற்கு உரியதாகும்.
★ உலகமய மாக்கலினால் உலகளாவிய போட்டி அதிகரித்த தொழில்துறை உலகில், ஊதியங்கள், **தொழிலாளர் உரிமைகள்,** வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை **அடிமட்டத்திற்குக் கொண்டு செல்ல** இது வழிவகுக்கும்.
★ இது உலகளாவிய **சமத்துவமின்மைக்கு** வழிவகுக்கிறது.
★ உலகமயமாக்கலால் குழந்தைத் **தொழிலாளர்** முறை மற்றும் **அடிமைத்தனம்** போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
★ மக்கள் **அதிகமாகத் துரித உணவுகளை** உட்கொள்கிறார்கள்.
★ இதனால் உடல்நலக் குறைவு மற்றும் **நோய் பரவுதலுக்கு** இது வழிவகுக்கிறது.
★ உலகமயமாக்கல், **சுற்றுச்சூழல் பாதிப்பை** ஏற்படுத்துகிறது.

## PTA & Exam Questions (Interior)

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. நியாயமான வர்த்தக உணவுப் பொருட்களுள் இடம்பெறாத ஒன்று எது ? **(PTA-5)**

அ) காபி ஆ) கோகோ
இ) தேன் ஈ) கைவினைப் பொருட்கள்

**விடை : ஈ) கைவினைப் பொருட்கள்**

2. அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு : **(Sep.-21)**

அ) 1999 ஆ) 2019 இ) 1992 ஈ) 2005

**விடை : அ) 1999**

3. இந்திய அரசாங்கத்தால் 1991இல் ______ அறிமுகப்படுத்தப்பட்டது. **(May-22)**

அ) உலகமயமாக்கல் ஆ) உலக வர்த்த அமைப்பு
இ) புதிய பொருளாதாரக் கொள்கை ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : இ) புதிய பொருளாதாரக் கொள்கை**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.

**1. MNC-யின் வளர்ச்சிக்கான காரணங்களை விவரிக்கவும். (April-23)**

**சந்தை நிலப்பரப்பின் விரிவாக்கம் :**

பெரிய அளவிலான நிறுவனங்கள் விரிவடைந்து வருவதால், அந்த நிறுவனம் உள்ள நாட்டின் புவியியல் **எல்லைகளுக்கு அப்பால்** அதன் செயல்பாடுகளை மேலும் **விரிவாக்குகிறது.**

**சந்தைப்படுத்தும் மேன்மை :**

ஒரு பன்னாட்டு நிறுவனம், தேசிய நிறுவனங்களின் மீது சந்தைப்படுத்தும் மேன்மையைக் கொண்டுள்ளது. இது சந்தை மதிப்பினைப் பெற்று, அதன் தயாரிப்புகளை விற்பனை செய்வதில் குறைவான **சிரமங்களை** எதிர் கொள்கிறது. மேலும், பயனுள்ள **விளம்பரம்** மற்றும் **விற்பனை** ஊக்குவிப்புத் **தொழில்நுட்பங்களை** ஏற்றுக் கொள்கிறது.

**நிதி மேன்மை :**

இதில் நிதி வளங்களும், உயர்நிதிப் பயன்பாடுகளும் உள்ளன. இதனால் வெளிப்புற மூலதனச் சந்தைகளை எளிதில் அணுகமுடியும் மற்றும் அதன் **சர்வதேசப் புகழ்** காரணமாக வளங்களை அதிகரிக்கவும் முடியும்.

**தொழில்நுட்ப மேன்மை :**

பின்தங்கிய நாடுகளில் **பன்னாட்டு நிறுவனங்கள்** பங்கேற்க, ஊக்கமளித்ததற்கான முக்கியக் காரணம், இந்த நிறுவனங்கள் தொழில் வளர்ச்சியில் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் காணப்படுவதேயாகும்.

**பண்டங்களின் கண்டுபிடிப்புகள் :**

பன்னாட்டு நிறுவனங்கள், புதிய தயாரிப்புகள் மற்றும் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை **மேம்பட்ட வடிவமைப்புகளாக** உருவாக்குவதற்கான பணியில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

**2. உலகமயமாக்கலின் நேர்மறைத் தாக்கம் மற்றும் எதிர்மறைத் தாக்கம் பற்றி எழுதுக. (May-22)**

**நேர்மறைத்தாக்கம் :**

- சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் **விரைவான வளர்ச்சியை** அறிமுகப்படுத்துகிறது. உலகமயமாக்கல் வர்த்தகத்தை வேகமாக அதிகரித்து, அதிக மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.
- புதிய **தொழில்நுட்பங்கள்** மற்றும் புதிய **அறிவியல் ஆராய்ச்சி** முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த **உள்நாட்டு உற்பத்தியை** அதிகரிக்கும்.
- இது பண்டங்களை தடையற்றதாகவும் தாராளமாக அதிகரிக்கவும், **வெளிநாட்டு** நேரடி முதலீடுகளை (FDI) அதிகரிக்கவும் உதவுகிறது.

**எதிர்மறைத்தாக்கம் :**

- நாடுகளுக்கிடையே அதிகமான மூலதனமானது விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறது. தேசிய ஒருமைப்பாட்டை இழந்து வருவதோடு, மிக அதிகமான வர்த்தக பரிமாற்றம் இருப்பதால், சுதந்திரமான **உள்நாட்டுக் கொள்கைகள்** இழக்கப்படுகின்றன என்பது அச்சத்திற்குரியதாகும்.
- முக்கிய உள்கட்டமைப்பும் மற்றும் வளங்களை பிரித்தெடுத்தலும் பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும், இது எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளை அதிகரிக்கும்.
- அந்நிய செலாவணியை பெறுவதற்காக, **இயற்கை வளங்கள்** மிக அதிகமாக **சுரண்டப் படுகிறது.** சுற்றுச்சூழல் பற்றிய **தரங்களும் கட்டுப்பாடுகளும்** தளர்த்தப்பட்டுள்ளன.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com